# வணக்கங்களின் விளக்கங்கள்

<தமிழ்-Tamil- تاميلي >

ஆசிரியர்

**அஷ் ஷெய்க் முஹம்மத் அஸ்ஸாலிஹ் அல் உஸைமீன்**

மொழி பெயர்த்தவர்

நூர் ஹம்ஸா முஹம்மத் ஸஈத்

மீளாய்வு செய்தவர்கள்

ஜாசிம் இப்னு தஇயான் - முஹம்மத் அமீன்

# فقه العبادات

لفضيلة الشيخ

محمد بن صالح العثيمين

ترجمة: نور الحمزة محمد سعيد

مراجعة:محمد أمين و جاسم دعيان

பிஸ்மில்லாஹ்ிர் ரஹ்மானிர் ரஹீம்

## அகீதா தொடர்பான மார்க்கத் தீர்ப்புகள்

## ஓரிறைக் கொள்கையும் நம்பிக்கையும்

கேள்வி 1

மதிப்புக்குரிய அறிஞர் அவர்களே மனித படைப்பின் நோக்கம் என்ன?

பதில் : அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருப் பெயரால் ஆரம்பிக்கிறேன்.

புகழனைத்தும் அகில உலகங்களின் இரட்சகனான அல்லாஹ்வுக்கே உரியது. எங்கள் நபி முஹம்மத் (ஸல்) அவர்களின் மீதும் அவர்களின் குடும்பத்தார் மற்றும் அவர்களின் தோழர்கள் அனைவர் மீதும் ஸலாத்தும், ஸலாமும உண்டாவதாக.

மேற்படி கேள்விக்கு விடையளிக்க முன் அல்லாஹ்வின் படைப்பு குறித்தும் அவனின் மார்க்க நியதியைக் குறித்ததுமான  ஒரு பொது விதி குறித்து தெளிவு படுத்த விரும்புகின்றேன். அப் பொதுவிதியானது பின்வரும் அல்லாஹ்வின் கூற்றுக்களான وهو العليم الحكيم 02: التحريم

“அவன் மிக அறிந்தோனும் ஞான மிக்கோனுமாவான்" .

01 : إِنَّ اللَّهَ كَانَ عَلِيما حَكِيماً الأحزاب நிச்சயமாக அல்லாஹ் (பிரபஞ்ச நிகழ்வுகள் குறித்து) மிக அறிந்தவனாகவும், ஞானமிக்கவனுமாகவும் உள்ளான்” என்ற வசனங்களிலிருந்தும் மற்றும் இக்கருத்தை பிரதிபலிக்கும் இது போன்ற குர்ஆனின் ஏனைய வசனங்களிலிருந்தும் பெறப்பட்டதாகும்.

இவ்வசனங்கள் யாவும் அல்லாஹ் படைத்த வற்றினதும், அடியார்களுக்கான மார்க்க வழிமுறை குறித்தும் மிகை ஞானம் அவனுக்கே உரியது என்பதை உறுதிப்படுத்துகிறன. அத்துடன் அதன் நோக்கத்தையும், காரணத்தையும் அவன் மிக அறிந்தவன் என்பதையும் காட்டுகிறது. இவை அவனின் பிரபஞ்ச ரிதியிலான மற்றும் அடியார் களுக்கான மார்க்க நியதிகளிலும் இருக்க முடியும். அவன் இந்த உலகத்தில் படைத்தவற்றில் ஒரு நோக்கம் அல்லது காரணம் இல்லாமல் இல்லை. அல்லாஹ் எதனை ஆக்கினாலும் அழித்தாலும் அதன் காரணத்தை மனிதனால் மிகச்சரியாக அறிய முடியாது. அதே போல் அடியார்களுக்கான அவனது மார்க்க ரிதியான சட்ட ஒழுங்குகளில் கட்டாயப்படுத்தியது, தடைசெய்யப்பட்டது, அனுமதித்தது போன்றவற்றிலும் முழுமையான ஞானம் அவனுக்கே உரியது.

என்றாலும் இவைகள் உள்ளடக்கியுள்ள இந்நோக்கங்கள் அவனின் பிரபஞ்ச மற்றும் மார்க்க வழிமுறைசார்ந்த

நியதிகளை உள்ளடக்கியுள்ளது அவைகள் சிலபோது எமது அறிவிற்குற்பட்டதாகவும் அறிவுற்குற்படாததாகவும் இருக்கலாம்: அல்லது சிலருக்கு தெரியவும் மற்றும் பலருக்கு தொியாமல் இருக்கவும் வாய்ப்பு உள்ளது. இவைகள் அல்லாஹ் அடியார்களுக்கு வழங்கியிருக்கும் அறிவையும் விளக்கத்தையும் பொருத்தது ஆகும்.

இவ்விடயத்தை நாம் புரிந்து கொண்டால் உண்மையில் அல்லாஹ் மனித ஜின் இனங்களை அவனை வணங்கி வழிபடும் உயர் இலட்சியத்திற் காகவும், உண்ணத நோக்கத்திற்காகவும் இவ்வுலகத்தில் படைத்துள்ளான் என்பதை நாம் புரிந்து கொள்ள முடியும்.

இக்கருத்தை பின்வரும் அல் குர்ஆனிய வசனங்கள் தௌிவுபடுத்துகின்றன.

وَمَا خَلَقْتُ الْجِنَّ وَالْإِنْسَ إِلاَّ لِيَعْبُدُونِ ( الذاريات :56

என்னை வணங்குவதற்காகவேயன்றி ஜின்களையும், மனிதர்களையும் நான் படைக்கவில்லை.

أَفَحَسِبْتُمْ أَنَّمَا خَلَقْنَاكُمْ عَبَثًا وَأَنَّكُمْ إِلَيْنَا لَا تُرْجَعُونَ (المؤ منون: 115

நாம் உங்களை வீணுக்காகப் படைத்தோம் எனவும் நிச்சயமாக நீங்கள் எம்மிடம் மீட்டப்படமாட்டீர்கள் எனவும் எண்ணிக்கொண்டிருந்தீர்களா?

أَيَحْسَبُ الْإِنسَانُ أَن يُتْرَكَ سُدًى (القيامة :36

மனிதன் (விசாரணையின்றி) வெறுமனே விட்டு விடப்படுவான் என அவன் எண்ணிக் கொண்டிருக் கின்றானா? (அல் கியாமா-36)

இக்கருத்தை பிரதிபலிக்கும் இதுபோன்ற அதிகமான வசனங்கள் அல் குர்ஆனில் இடம் பெற்றிருப்பதை அவதானிக்கலாம். அவைகள் யாவும் மனித ஜின் இனத்தை படைத்ததின் உயரிய நோக்கம் அவனை வணங்கி வழிபடுவதாகும் என்பதே.

அல்லாஹ்வுக்கு முற்றிலும் கட்டுப்பட்டு அவன் எமக்களித்த ஷரீஆ சட்டதிட்டங்களுக்கேட்ப அவனின் கட்டளைகளை ஏற்று நடப்பதன் மூலமும் அவன் தடுத்தவற்றிலிருந்து முற்றாக விலகி நடப்பதன் மூலமும் அவனை மகத்துவப் படுத்தி அன்பு கொள்வதனையே இபாதத் என்பது குறிக்கும்.

அல்லாஹ் இக்கருத்தை தனது திருமறையில் நேரிய வழி நின்று கலப்பற்றவர்களாக அவனுக்கு கட்டுப்பட்டு அல்லாஹ்வை வணங்குமாறு தவிர ஏவப்படவில்லை எனப் பிரஸ்தாபிக்கின்றான்.

ஆகவே இதுதான் மனித, ஜின் இனத்தினரை படைத்ததின் நோக்கமாகும். இந்நோக்கத்தை விட்டு விலகி எவறேனும் ஒரு மனிதன் தனது இரட்சகனுக்கு கட்டுபடாது, அவன்

விதித்த கடமைகளை புறக்கனித்து மனமுரண்டாக நடந்து கொள்வானாயின் அவன் அல்லாஹ் படைத்த நோக்கத்தை பொருட்டாக கொள்ளாதவனாக மாறிவிடுகிறான்.

இவ்வாறான அவனது செயற்பாடானது இறை படைப்பின் நோக்கத்தை ஒரு பொருட்டாகவே கருதாததற்கு சான்றாக அமைந்து விடும் ஆபத்தான நிலையாகும். இதனை அவன் வெளிப்படையாக குறிப்பிடவில்லையாயினும் மேற்குறிப்பிட்ட பொறுப்பற்ற தன்மையையே காட்டும். இதுவே அல்லாஹ்வுக்கு கட்டுப்படாது மனமுரண்டாக நடத்தல் என்பதற்கான கருத்தாகும்.

கேள்வி : இபாதத் என்பதற்கு நாம் குறிப்பிட்டு சொல்லக் கூடிய கருத்து உள்ளதா? அல்லது அதற்கு பொதுக் கருத்து (மப்ஹூம் ஆம்)مفهوم عام அல்லது (மப்ஹூம் காஸ்) مفهوم خاص வரையருக்கப்பட்ட குறிப்பான கருத்தொன்று உள்ளதா?

பதில் :ஆம், நான் மேலே குறிப்பிட்டது போன்று இபாதத் என்பது அல்லாஹ்வில் அன்பு கொண்டு அவனுக்கு கட்டுப்படுவதனைக் குறிக்கும். இதுவே இபாதத்திற்கான “மப்ஹூம் ஆம்” مفهوم عام பொதுவான கருத்தாகும்.

مفهوم خاص குறிப்பான புரிதல் என்பதின் விரிவான கருத்தை இமாம் இப்னு தைமியா (ரஹ்) அவர்கள்

பின்வருமாறு குறிப்பிடுகிறார் “இபாதத் -வணக்கம் என்பது அல்லாஹ் வுக்குப் பிரியமான திருப்தியான, வெளிப்படையான, மறைமுகமான அனைத்து வார்த்தைகளும், செயல்களுமாகும்.

அல்லாஹ்வைப் பயப்படுதல், அஞ்சுதல், அவன் மீது நம்பிக்கை வைத்தல், தொழுதல், ஸகாத் கொடுத்தல், நோன்பு நோற்றல் மற்றும் இவையல்லாத இஸ்லாமிய ஷரிஆ காட்டித்தரும் அம்சங்கள் இதற்கான உதாரணங்களாகும்.”

அல்லது இபாபதத்திற்கான “மப்ஹூம் ஆம்” மப்ஹூம் காஸ்” என்ற இரு கருத்தியல்களின் மூலம் நீங்கள் நாடுவது சில அறிஞர்கள் இபாதத்தை “இபாதா கவ்னிய்யா” இபாதா ஷரஇய்யா என்று வகைப்படுத்தியமையை கருதுவீர்களாயின்

அதாவது அதன் கருத்தாவது மனிதனைப் பொருத்தவரை ஒன்றில் “இபாதா கவ்னிய்யா” பிரபஞ்ச நியதிகளுக்கு அமைவாக அல்லாஹ்வுக்கு கட்டுப்பட்டு வாழுதல் அல்லது அவனால் வகுத்தளித்த ஷரீஆவினூடாக கட்டுப்பட்டு வாழுதல் என்பதாகும் .

“இபாதா கவ்னிய்யா” பிரபஞ்ச நியதிகளுக்கு கட்டுப்பட்டு வாழுதல் என்பது பொதுவாக இறைவிசுவாசி – மு ஃமின், காபிர், நல்லவன், கெட்டவன் என்ற வித்தியாசமின்றி இதற்கு உட்பட்டவர்களாக உள்ளனர். இக்கருத்தை பின்வரும் இறைவசனம் சுட்டுகிறது.

IslamHouse.com

“வானங்கள், பூமியில் உள்ளவை அனைத்தும் அர்ரஹ்மானின் அடிமையாகவே வருவர்.”

எனவே பிரபஞ்சத்தில் உள்ளவை அனைத்தும் பிரபஞ்ச விதிகளுக்கு உட்பட்டு அல்லாஹ்வுக்கு கட்டுப்பட்டே உள்ளன என்பது உண்மையாகும். அவை எந்தவொரு நிலையிலும் பிரபஞ்சவிதிகளை மீறி அல்லாஹ்வுக்கு எதிராக, அல்லது முரணாக எவ்வகையிலும் செயற்பட முடியாது.

அல் இபாதா அல்- காஸ்ஸா (العبادة الخاصة) வைப் பொறுத்த மட்டில் ஷரிஆ அடிப்படையில் செயற் படுவதாகும். இது அல்லாஹ்வை ஏற்று விசுவாசித்த மு:ஃமின்களுக்கானதாகும். இவ் வகையை பொருத்தவரை நபிமார்களைப் போன்று மிக உரிய நிலையில் அல்லாஹ்வுக்கு கட்டுப்பட்டு வணக்கம் செலுத்தியோர் எனவும் அதை விட குறைந்த தரத்தில் வணக்கம் செலுத்தியோர் எனவும் வித்தியாசப்படுத்தி குறிப்பிட முடியும். இறைதூதார்கள் அல்லாஹ்வுக்கு முழுமையாக கட்டுப்பட்டு வணக்கம் செலுத்தியோர் என்ற வகையில் அவர்கள் உபூதிய்யத் எனும் உயர் நிலை பண்பை பெற்றிருந்தார்கள் என்பதை பின்வரும் அல் - குர்ஆன் வசனங்கள் காட்டுகின்றன.

“தனது அடியானுக்கு புர்கானை இறக்கிவைத்தவன் மிகத்தூயவனாக உள்ளான்” புர்கான் 1

நமது அடியார் (முஹம்மத் (ஸல்) மீது இறக்கியவற்றில் நீங்கள் சந்தேகத்திலிருந்தால் பகரா 23

எமது அடியார்களாகிய இப்ராஹீம், இஸ்ஹாக், யஃகூப் ஆகியோரை நினைவு கூர்வீராக “ ஸாத் 45

கேள்வி: 3

இபாதா ஷரஇய்யாவை புறக்கணித்து – ஷாரிஆ ரீதியாலான வணக்க வழிபாடுகளில் ஈடுபடாமல் இபாதா கவ்னிய்யா (عبادة كونية ) “பிரபஞ்சாீதியான விதிகளுக்கு உட்பட்டு வாழுகின்றவாகளுக்கு இறை கூலி கிடைக்குமா?

பதில்: அவர்களுக்கு இறைகூலி கிடைக்காது. ஏனெனில் அவர்கள் அல்லாஹ்வுக்கு தனது சுயவிருப்பத்தின் பேரில் கட்டுப்படவில்லை, அவர்கள் விரும்பியோ விரும்பாமலோ இயல்பாக அல்லாஹ்வின் பிரபஞ்ச விதிகளுக்கு அவர்கள் கட்டுப்பட்டவர்களாக உள்ளனார். அதாவது மனிதனைப் பொருத்தவரை இவ்வுலகில் நோய் வாய்ப்படுவதும், வறுமை பீடிப்பதும், நேசத்திற்குரிய வர்களை இழப்பதும் அவன் விரும்பாத விடயங்களாகும். எனவே அவன் பிரபஞ்ச ரீதியான விதிகளுக்கு கட்டுப்பட்டே தீர வேண்டும். அதற்கு எவ்விதப் பெருமானமும் கிடையாது

அடியார்கள் மீதுள்ள முதல் கடமை

கேள்வி : 4

அடியார்கள் மீதான முதல் கடமை என்ன?

பதில் : அடியார்கள் மீதான முதல் கடமையையும், அடியார்கள் அழைக்கப் பட வேண்டிய முதல் விடயத்தையும் முஆத் (ரழி) அவர்களை யமனுக்கு அனுப்பும்போது நபியவர்கள் அவர்களுக்கு குறிப்பிட்ட செய்தி தெளிவு படுத்துகிறது. நபியவர்கள் அவரை நோக்கி பின்வருமாறு குறிப்பிட்டார்கள் "நீ தற்போது வேதம் கொடுக்கப் பட்டவர்களிடம் செல்லப் போகிறாய், ஆகவே அவர்களை வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு உண்மைக் கடவுள் இல்லையெனவும், முஹம்மத் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதராவார் எனவும் ஏற்று சாட்சி சொல்வதன் பால் முதலில் அழைக்க வேண்டும்.

எனவே அல்லாஹ்வை ஒருவனாக ஏற்று நபியவர்களை தூதர் என ஏற்று சான்று பகருவதும் தான் அடியார்களின் மீதுள்ள முதல் கடமையாகும்.

இவ்விரண்டு அடிப்படைகள் மூலம் தான் எல்லா வணக்கங்களும் ஏற்றுக் கொள்ளப் படுவதற்குரிய பின்வரும் இரு நிபந்தனைகளும் அமையப் பெறுகின்றன. அவைகளில் முதலாவது அல்லாஹ் வுக்கென மாத்திரம் எந்த கருமத்தையும் மேற் கொள்ளல் எனும் இஹ்லாஸ் إخلاص மனத்தூய்மை, இரண்டாவது செயல்கள் யாவும் அல்லாஹ்வின் தூதரைப் பின்பற்றியதாக இருத்தல் என்ற முதாபஆ متابعة போன்றனவாகும்.

ஆகவே அல்லாஹ்வை ஒருவனாக ஏற்று நபி ஸல் அவர்களை தூதுத்துவத்திற்கு சான்று பகார்ந்து ஏற்றுக் கொள்வதுதான் அடியார்களின் முதல் கடமை. லாஇலாஹ இல்லல்லாஹ் என்ற வாசகமானது ஓரிறைக் கொள்கையின் முழுக் கருத்தையும் உள்ளடக்கியுள்ளது என்பதும் கவனிக்கத் தக்கதாகும்.

தவ்ஹீதின் வகைகளினுடனான ஷஹாதா கலிமாவின் தொடர்பு

கேள்வி: الشهادة" கலிமாவானது தவ்ஹீதின் அனைத்து வகைகளையும் உள்ளடக்கியுள்ளதா?

பதில்: الشهادة" கலிமாவானது தவ்ஹீதின் அனைத்து வகைகளையும் உள்ளடக்கியுள்ளது. அவை பின் வரும் இரு நிலைகளில் இருக்க முடியும் ஒன்றில் கருத்து ரிதியிலானதாக, அல்லது உள்ளடக்கத்ீதி லானதாக இருக்க முடியும். அதாவது இதனை உதாரணம் மூலம் குறிப்பிடுவதாயின் ஒருவா "நான் அல்லாஹ்வைத் தவிர உண்மையான கடவுள் எவரும் கிடையாது" என சான்று பகர்கிறேன் எனக் குறிப்பிடின் இதன் கருத்து அவன் உண்மையாக வணக்கத்திற்குரியவன் அல்லாஹ் ஒருவன் எனக் குறிப்பிட்டுள்ளான் என்பதே எமது புரிதலுக்கு உட்படுகின்ற ஒரு விடயமாகும்.

அதாவது توحيد العبادة" தவ்ஹீதுல் இபாதா என்பது தவ்ஹீதுல் உலூஹிய்யாவான கொள்கை ரீதியாக

அல்லாஹ்வை ஒருவன் என ஏற்று வணங்குதல் என்ற விடயங்களை வலியுறுத்தும். அதே வேலை توحيد الربوبية தவ்ஹீதுல் ருபூபிய்யாவையும் கருத்து ரீதியாக அல்லாஹ்வை ஒருவன் என ஏற்றுக் கொள்ளுதல் என்ற கருத்தும் அதில் உள்ளடங்கியுள்ளது. ஏனெனில் அல்லாஹ் வை மாத்திரம் வணங்குபவர்கள் توحيد தவ்ஹீதுல் ருபூபிய்யாவை ஏற்காது அவனை வணங்குவது சாத்தியமில்லை. அது நிகழமுடியாத விடயமுமாகும். அது மட்டுமல்லாமல் توحيد العبادة தவ்ஹீதுல் இபாதாவானது அல்லாஹ்வை அவனது பெயர்கள் பண்புகளில் தனித்துவமானவன் என ஏற்றுக்கொள்ளும் توحيد الأسماء والصفات என்ற வகையும் உள்ளடக்கியுள்ளது என்பதும் முக்கிய அம்சமாகும்.

ஆகவே ஒரு மனிதனைப் பொருத்தமட்டில் எதை வணங்குவதாயினும் அது வணக்கத்திற்கு தகுதி யானது என ஏற்று அதன் பெயர்களையும், பண்புகளையும் அறிந்துதான் வணங்க தலைப் படுகிறான். இதனால் தான் இப்ராஹீம் அலை அவர்கள் தனது தந்தையை நோக்கி “எனது அருமைத்தந்தையே கேட்காத, பார்க்காத, உமக்கு எவ்விதப்பயனையும் தராதவற்றை ஏன் வணங்கு கிறீர்கள்? எனக் கேட்டார்கள்.

எனவே (توحيد العبادة) தவ்ஹீதுல் இபாதா என்பது தவ்ஹீதுல் உலூஹிய்யாவைக் குறிக்கிறது. தவ்ஹீதுல்

உலூஹிய்யாவானது (توحيد الربوبية) தவ்ஹீதுல் ருபூபிய்யாவையும் (توحيد الأسماء والصفات) தவ்ஹீதுல் அஸ்மாஇ வஸ்ஸிபாத் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது

தவ்ஹீத்- ஓரிறைக்கொள்கை என்பதின் கருத்து

கேள்வி :தவ்ஹீத் என்பதன் கருத்து யாது?

பதில் : தவ்ஹீத் என்ற சொல் “வஹ்ஹத” என்ற சொல்லின் வினையடியாகும். இதற்கு “ஒருமைப் படுத்துதல்” தனித்தவனாய் இருத்தல் அல்லது ஒரு குறிப்பிட்ட ஒன்றை தனித்தன்மைப் பெற்றதாக மாற்றுதல் என்பது இதன் மொழிக் கருத்தாகும். இச்சொல்லானது மேற்படி கருத்தை பிரதிபலிப்பதாயின் இரண்டு அம்சங்களை பெற்று வரவேண்டும். அவை نفي நிராகரித்தல் اثبات உறுதிப்படுத்தல் என்பவையாகும். அதாவது குறிப்பிட்ட பொருளானது தனது தனித்தன்மைக்கு பொருந்தாதவற்றை ஏற்காதிருத்தல் (نفي) பொருத்தமானதை ஏற்றுக்கொள்ளுதல் (اثبات) எனும் இரு அம்சங்களை பெற்று வரும் போது தான் இவ்விடயம் சாத்தியமாக முடியும்.

அல்லாஹ்வைத் தவிர உண்மைக் கடவுள் எவருமில்லை என சாட்சி கூறி இறைமைத்துவம் (الألوهية) அல்லாஹ்வைத் தவிர வேறு எந்த ஒன்றிற்கும் கிடையாது என உறுதியாக நம்பி, அல்லாஹ்

மாத்திரம்தான் அதற்கு மிகத் தகுதியானவன் என உறுதியாக நம்பும் வரையில் ஒரு மனிதனின் ஓரிறைக் கொள்கை பரிபூரணம் பெற்றதாக அமையாது.

அதாவது முழுமையாக ஒன்றை நிராகரித்தல் என்பது அதனை முழுமையாக பொருட்படுத்தாமல் இருத்தல் என்பதாகும்.அதே போல் ஒரு விடயத்தை முழுமையாக உறுதிப்படுத்தல் என்பது ஏனையவை அத்தீர்ப்பில் பங்குகொள்ள முடியாது என்பது அர்த்தமல்ல. உதாரணத்திற்கு அறபு இலக்கன அமைப்பில் இவ்விடயத்தை பின்வருமாறு தெளிவு படுத்த முடியும்.

ஒரு மனிதன் எழுந்து நின்றான் என நாம் குறிப்பிடின் அவன் எழுந்து நிற்பதை மாத்திரமே குறிக்கும். மாற்றமாக அவன் மாத்திரம் எழுந்து நின்றான் பிறர் எழுந்து நிற்கவில்லை என்பதை காட்டாது ஆகவே பிறார் எழுந்து நிற்க முடியும் என்பதும் தெளிவாகும். அதே போல் எழுந்து நிற்பவன் எவனும் கிடையாது எனக்குறிப்பிட்டால் மற்றவர்கள் இவ்விடயத்தில் பங்கு கொள்ள வில்லை என்பதை விளங்க முடிகிறது

ஸைதை தவிர எழுந்து நிற்கவில்லை என நாம் குறிப்பிட்டால் ஸைத் மாத்திரம்தான் எழுந்து நிற்பவன், மற்ற எவரும் கிடையாது என்பது பொருள்

இதே போன்றுதான் நடைமுறையில் நாம் தவ்ஹீத் - என்ற சொல்லையும் விளங்க வேண்டும் அதாவது தவ்ஹீத் என்பது அல்லாஹ்வைத் தவிர உண்மைக்

கடவுள் வேறு எவரும் கிடையாது. இவ்வாசகத்தில் இரு விடயங்கள் புதைந்திருக் கின்றன. உண்மையான கடவுள் அல்லாஹ் மாத்திரம் என்பதும் இதனை 'إثبات" என்றும் வேறு கடவுள்கள் கிடையாது என குறிப்பிடும் "نفي" எனும் இரு அம்சங்களையும் கொண்டிருக்கிறது. உண்மையான தவ்ஹீத் என்பது இவ்விரு அம்சங்ளையும் பெற்று வருதன் மூலமே முழுமை பெரும்.

கேள்வி : தவ்ஹீதின் வகைகளை சுருக்கமாக குறிப்பிட முடியுமா?

பதில் : அறிஞர்கள் குறிப்பிட்டதற்கிணங்க தவ்ஹீத் (توحيد) மூன்று வகைப்படுகிறது அவைகளாவன. தவ்ஹீதுர் ருபூபிய்யா (توحيد الربوبية), தவ்ஹீதுல் உலூஹிய்யா, ( توحيد الألوهية) தவ்ஹீதுல் அஸ்மா, வஸ்ஸிபாத் ( توحيد الأسماء والصفات) என்பவைகளாகும்.

இவ்வகைப்படுத்தலை அறிஞார்கள் அல்குர்ஆனிய வசனங்களையும், ஹதீஸ்களையும் பகுப்பாய்வு செய்வதினூடாக பெற்றுக்கொண்டதுடன் தவ்ஹீத் என்ற கருத்தியல் இம்மூன்று வகையில் உள்ளடங்கி விடுவதையும் தமது ஆய்வினடியாகக் கண்டு கொண்டனர்.

கேள்வி : தவ்ஹீதின் வகைகளை விரிவாகவும், உதாரணங்களுடன் குறிப்பிட முடியுமா?

பதில்: பொதுவாக தவ்ஹீதின் வகைகளை அல்லாஹ்வுடன் தொடர்பு படுத்தி குறிப்பிடும்போது "அல்லாஹ் பெற்றிருக்கும் பிரத்தியேகமான, விசேடமான அம்சங்களில் அவன் தனித்துவ மானவன் என்பதை ஏற்றுக் கொள்ளுதல்." எனும் ஒரு பொது வரைவிலக்கிணத்திற்குள் உள்ளடக்கி விடமுடியும். எனவே தவ்ஹீத் மூன்று வகைப் படுகிறது அவற்றை பின்வருமாறு விரிவாக குறிப்பிட முடியும்.

முதலாவது: தவ்ஹீதுர் ருபூபிய்யா : "التوحيد الربوبية" இப்பிரபஞ்சத்தை படைத்து பரிபாலித்து திட்டமிட்டு ஆட்சி செலுத்துவதில் அல்லாஹ்வை தனித்துவ மானவன் என ஒருமுகப்படுத்துவதே தவ்ஹீத் அர்ருபூபிய்யா என்பதின் கருத்தாகும் எனவே தவ்ஹீதுத் ருபூபிய்யா : "التوحيد الربوبية" என்பது படைத்தல், ஆட்சிசெய்தல், திட்டமிடுதல் எனும் மூன்று அடிப்படை அம்சங்களை கொண்டிருக்கிறது இவற்றில் முதல் அம்சமான இறைப்படைப்பில் அல்லாஹ் தனித்துவமானவன் குறித்து விளங்க முற்படுவோம். இவ்வகையில் அல்லாஹ்வைத் தவிர வேறு படைப்பாளன் கிடையாது என்ற உண்மையை பற்றி அல்லாஹ் குறிப்பிடும் போது அல்லாஹ்வைத் தவிர வேறு படைப்பாளன் இருக்கின்றானா? அவனே வானம், பூமியிலிருந்து உங்களுக்கு உணவளிக்கின்றான்,

அவனைத் தவிர உண்மையான கடவுள் எவருமில்லை.(அல் பாதிர் 3)

ஆகவே படைக்கின்றவனும், படைக்காதவனும் சமமாவார்களா? நீங்கள் சிந்தித்து உணர்ந்து கொள்ள வேண்டாமா? (அந்நஹ்ல் 17)

ஆகவே படைப்பாளன் அல்லாஹ் மாத்திரம் தான். அவன் தான் அனைத்து சிருஷ்டிகளையும் படைத்து அவற்றின் அளவையும் நிர்ணயம் செய்தான். .அவனின் படைப்பானது அவனின் பிரதிபலிப்பு களையும் (مفعولات), அடியானின் பிரதிபலிப்புக் களையும் உள்ளடக்கியுள்ளது. இந்த உண்மையைத் தான் இறை நியதி கலாகத்ரை ஈமான் கொள்ளுதலின் பூரண நிலையானது. அல்லாஹ் மனிதனது செயற்பாடுகளை சிருஷ்டிப்பவன் -படைப்பவன் என ஈமான் கொள்வது எடுத்து காட்டுகிறது. இது குறித்து அல்லாஹ் குறிப்பிடும் போது "உங்களையும் நீங்கள் செய்யும் செயல் களையும் அல்லாஹ் படைத்தான் என குறிப்டுகிறான்.

இதனை மேலும் தெளிவு படுத்துவதாயின் அடியானின் செயற்பாடானது அவனின் பண்புகளில் ஒன்றாகும். அடியான் அல்லாஹ்வுக்காக படைக்கப்பட்டவன் எனவே ஒரு குறித்த பொருளை படைத்தவன் அதன் பண்புளையும் படைத்தவனா வான் என குறிப்பிட முடியும்.

இவ்விடயத்தை இன்னொரு வகையில் குறிப்பிடுவதாயின் “அடியான் செய்யும் செயலானது அவனின் பூரண விருப்பத்துடன், அவனது ஆற்றலுக்குட்பட்டும் நிகழ்கிறது. எனவே காரணத்தைப் படைத்தவன் அக்காரணத்திற்கு படுகின்றவைகளையும் படைத்துள்ளான் என்பது தெளிவாகிறது.

அத்துடன் இப்படைத்தல் என்ற விடயத்தில் அல்லாஹ் தனித்துவமானவன் என அல்லாஹ்விற்கு மாத்திரம் குறிப்பிட்டாலும், இவ்விடயமானது மனிதர்களுடனும் தொடர்பு படுவதை காணலாம். இக்கருத்தை பின்வரும் அல்லாஹ்வின் திருவசனத்திலிருந்தும் நபியவர்க ளின் கூற்றிலிந்தும் பெற முடிகிறது. “படைப்பாளர்களில் மிகச் சிறந்தவனான அல்லாஹ் மிகவும் மகத்துவமிக்கவனாக உள்ளான் (அல் முஃமினூன் -14)

நபி ஸல் அவர்கள் சிலைகளை வடித்தவர்கள் பற்றி குறிப்பிடும் போது “மறுமை நாளில் அவர்களைப் பார்த்து நீங்கள் படைத்தவைகளுக்கு நீங்களே உயிர் கொடுங்கள் என அவர்களுக் கூறப்படும்”.

மேற்படி இக்கருத்துக்கான பதிலாவது அல்லாஹ் அல்லாதவர்கள் அல்லாஹ்வின் படைப்பை போன்று படைக்க முடியாது என்பதுதான். ஏனெனில் இல்லாமையிருந்து புதிதாக படைத்தல் என்பதும் மரணித்தவரை உயிர்ப்பிப்பதும் முடியாத விடயங்களாகும். மனிதனின் படைப்பு என்பது

மாற்றத்தை ஏற்படுத்துதல், ஒரு பொருளை இன்னொரு வடிவத்துக்கு மாற்றுதல் போன்ற வற்றுடன் வரையறுக்கப் பட்டுள்ளது. ஏனெனில் அவனும் அல்லாஹ்வின் படைப்பாகும். உதாரணத்திற்கு ஒரு மனிதன் புகைப்படம் எடுத்தால் அவன் எந்த ஒன்றையும் புதிதாகச் செய்யவில்லை இவ்விடயத்தில் அவனின் உச்சகட்ட முயற்சியானது குறிப்பிட்ட பொருளை இன்னொன்றாக மாற்றியமையே. அதாவது கலிமண்ணால் ஒரு பறவையை, ஒட்டகத்தை வடிவமைப்பது போன்றாகும் அல்லது வெள்ளை காகிதத்தில் அழகான வர்ணங்களை பயன்படுத்தி அழகான உருவத்தை வரைவதற்கு ஒத்ததாகும். எனவே இந்த செயற்பாட்டில் பயன்படுத்தப்பட்ட வர்ணமும் வெள்ளைக் காகிதமும் அல்லாஹ்வின் படைப்பாகும் என்பதே உண்மை.

இதுவே அல்லாஹ்வின் படைத்தலுக்கும், மனிதனின் படைத்தலுக்கிடையில் உள்ள வித்தியாசமாகும். எனவே நாம் மேலே குறிப்பிட்டது போன்று அல்லாஹ் அவன் பெற்றி ருக்கும் பிரத்தியேகமான அம்சங்களில் தனித்துவ மானவனாக இருக்கிறான் .இவ்விடயத்தில் மனிதனுக்கு எவ்வித அதிகாரமும் கிடையாது.

அத்துடன் தவ்ஹீதுத் ருபூபிய்யா : "توحيد الربوبية" உள்ளடக்கியுள்ள இன்னொரு அடிப்படை அம்சம் யாதெனில் அல்லாஹ்வின் ஆட்சி அதிகாரம்

பற்றியதாகும். இந்த விடயத்திலும் அல்லாஹ் மாத்திரமே தனித்துவமானவனாக உள்ளான். அல்லாஹ் இது பற்றி பிரஸ்தாபிக்கும் போது “ஆட்சி யாரின் கையில் உள்ளதோ அவன் துய்மை யானவனாக உள்ளான். அவன் யாவற்றின் மீதும் ஆற்றலுடையவன்” (ஸூறத்துல் முல்க் 1)

“நீங்கள் அறிந்திருந்தால் (உங்களைப்) பாதுகாப்ப வனும், எவராலும் பாதுகாக்கப்படாதவனும், அனைத்து பொருட்களிலும் தனது அதிகாரத்தை வைத்திருப்பனும் யார்? நபியே நீ அவர்களிடம் கேட்பீராக. (அல் முஃமினுன் 88)

இவ்வசனங்கள் யாவும் இப்பிரபஞ்சத்தில் முழுமையான அதிகாரத்தை பெற்றவன் அல்லாஹ் மாத்திரமே எனக் குறிப்பிடுகின்றன. எனினும் இவ்வதிகாரத்தின் சிலதை ஏனையவர்களும் பெற்றிருக்க முடியும் என்பதை பின்வரும் அல்குர்ஆனிய வசனங்களில் குறிப்பிடுகின்றான். “நீங்கள் எவற்றின் திறவு கோள்களை உடமையாக்கிக் கொண்டீர்களோ…..” அந்நூர் 61

“அவர்களின் மனைவியார் மற்றும் அவர்கள் வலக்கரம் சொந்தமாக்கிக்கொண்டோர் தவிர “ அல் முஃமினூன்

மேற்படி வசனங்களும் இதே கருத்தை வலியுறுத்தும். இது போன்ற வசனங்கள் யாவும் அல்லாஹ் அல்லாதவர்களும் அதிகாரம் பெற்றிருக் கிறார்கள் என்பதை குறிப்பிடுகிறது.

ஆனாலும் அவ்வதிகாரம் யாவும் முழுமையற்றது, வரையறுக்கப்பட்டது என்பதே உண்மையாகும், இதனை ஒரு எளிய உதாரணம் மூலம் விளக்க முடியும். அதாவது ஸைதிற்குச் சொந்தமான ஒரு வீடு அம்ருக்கு சொந்தமானது அல்ல. அதே போல் அம்ரின் வீடு ஸைதிற்கு சொந்தமானது அல்ல. எனவே இவ்வதிகாரமானது மனிதனைப் பொறுத்த மட்டில் வரையறுக்கப்பட்டது. அதே போல் ஒரு மனிதன் முழு அதிகாரம் பெற்றவற்றில் கூட அல்லாஹ் விதித்த வரையறையுடன்தான் அதனை நிர்வகிக்க முடியுமே தவிர அவனின் சுய விருப்பின் போால் அதனை நிர்வகித்து அதிகாரம் செலுத்த முடியாது, இதைத்தான் நபி ஸல்) அவர்கள் செல்வங்களை எவ்விதத் தேவையின்றி வீணாக்ககுதலை அல்லாஹ் தடுத்திருப்பதாக குறிப்பிட்டார்கள். அத்துடன் இதே கருத்தை அல்லாஹ் பின்வரும் அல் குர்ஆன் வசனத்திலும் குறிப்பிடுகின்றான். “அல்லாஹ் உங்களிடம் நிர்வகிப்பதற்காக வழங்கியிருக்கும் சொத்துக்களை விபரம் அறியாதவர்களிடம் கொடுத்துவிடாதீர்கள்.” அன்னிஸா 5

மேற்குறிப்பிட்ட இறைவசனங்களும் நபியவர்களின் ஹதீஸூம் மனிதன் பெற்றிருக்கும் அதிகாரம் குறைவானது, வரையறுக்கப்பட்டது என்பதற்கான தெளிவான ஆதாரமாக உள்ளது என்பதை புரிந்து கொள்ளலாம். நிறைவானதும், முழுமையானதும்

அதிகாரத்திற்கு சொந்தக்காரனாக அல்லாஹ் மாத்திரமே உள்ளான். அவன் நாடியதை செய்பவன் அவன் செய்பவற்றை குறித்து கேள்வி கேட்டு விசாரிக்கும் அதிகாரம் எவருக்கும் கிடையாது. ஆனால் மனிதன் செய்யும் செயல்களைக் குறித்து விசாரிக்க முழு அதிகாரம் பெற்றவன் அவனே.

தவ்ஹீத் அர்ருபூபிய்யா உள்ளடக்கியுள்ள மூன்றாவது அடிப்படை அம்சம் யாதெனில் அவனின் திட்டமிடலாகும். இதிலும் அவன் மாத்திரம் தனித்துவம் நிறைந்தவனாக உள்ளான். எனவே சிருஷ்டிகளைப் படைத்து வானங்கள் மற்றும் பூமியின் சீரான இயக்கத்தை திட்டமிட்டு வழிநடாத்துகிறான். இதனை அல்லாஹ் பின் வருமாறு குறிப்பிடுகின்றான் “படைக்கும் ஆற்றலும், கட்டளை பிறப்பிக்கும் அதிகாரமும் அவனுக்கே உரியனவாகும் என்பதை அறிந்து கொள்ளுங்கள். அகிலாத்தாரின் இரட்சகனாகிய அல்லாஹ் அருள்வளமிக்கவனாவான்” அல் அஃராப் 54

அல்லாஹ்வின் இத்திட்டமிடல் நிறைவானதும் முழுமையானதுமாகும். இதனை தடுக்கவோ, குறுக்கீடு செய்யவோ எவருக்கும் முடியாது ஆனாலும் அல்லாஹ்வின் சில படைப்பினங்க ளுக்கு இப்பண்பை அல்லாஹ் கொடுத்திருக்கிறான். உதாரணத்திற்கு மனிதன் தனது செல்வங்களை குழந்தைகளை, பணியாளர்களை திட்டமிட்டு வழி நடாத்தும் விடயத்தைக் குறிப்பிடலாம்.

இவைகள் யாவும் குறிப்பிட்ட விடயங்களுடன் வரையறுக்கப் பட்டுள்ளன. இவை முழுமையான திட்டமிடல் அல்ல.

ஆகவே தவஹீதுத் ருபூபிய்யா : "توحيد الربوبية" விற்கான வரைவிலக்கணத்தில் குறிப்பிடப்பட்ட படைக்கும் ஆற்றல், அதிகாரம், திட்டமிடல் எனும் மூன்று அம்சங்களிலும் அல்லாஹ் தனித்துவ மானவன் என்பதை ஏற்றுக்கொள்ளல் என்ற எமது கூற்று உண்மையானது என்பதைப் புரிந்து கொள்ளலாம்.
தவ்ஹீதின் - ஓரிறைக் கொள்கையின் -இரண்டாம் பகுதி தவ்ஹீதுல் உலூஹிய்யா (توحيد الألوهية) வாகும் – வணங்கி வழிபடுவதன் மூலம் அல்லாஹ்வை ஒருமைப்படுத்தி ஏற்றுக்கொள்வது இதன் கருத்தாகும்.

அல்லாஹ்வை வணங்கி அவனை நெருங்குவது போன்று மனிதன் அல்லாஹ்வுடன் வேறொன்றை சேர்த்து வணங்கி வழிபட்டு நெருங்குவதற்கு எடுத்துக்கொள்ளக் கூடாது. அவ்வாறு எடுத்துக் கொள்வது இப்பிரிவிற்கு மாற்றமான அம்சமாகும். இப்பிரிவில்தான் இணைவைப்பாளர்கள்- அல்லாஹ் அல்லாதவற்றை கடவுளாக மதித்து நடக்கும் அனைவரும் - வழிதவறியுள்ளனார். .மேலும் -தவ்ஹீதுர் ருபூபிய்யாவுடனும், தவ்ஹீதுல் அஸ்மாஇ வஸ்ஸிபாத் என்ற பிரிவுடன் சோத்து - தவ்ஹீதுல் உலூஹிய்யா (توحيد الألوهية) வை நிலை நாட்டவே தூதாகள்

அனுப்பட்டமையும், வேதங்கள் இறக்கப் பட்டமையுமாகும்.

மனிதன் அல்லாஹ்வுக்கு செலுத்தும் வணக்கங்கள் எதையும் அல்லாஹ்வுக்கு நெருக்கமான மலக்குக்கோ, இறைதூதருக்கோ, இறை நேசருக்கோ, அல்லாஹ்வின் படைப்புக்களில் ஒன்றிற்கோ செலுத்தி விடாமல் இருப்பதற்காக நபிமார்கள் - இறை தூதர்கள் தனது சமூகத்திற்கான இறைபிரச்சாரத்தில் அதிகம் கவனம் செலுத்திய ஒரு பகுதியாக தவ்ஹீத் உலூஹிய்யா உள்ளது. காரணம் யாதெனில் வணக்கம் என்பது அல்லாஹ்விற்கு மாத்திரம் செலுத்தப் பட வேண்டிய ஒன்றாக இருப்பதினாலாகும். இவ்வடிப்படையை ஏற்காதவன் தவ்ஹீதின் இரு பிரிவுகளான தவ்ஹீத் ருபூபிய்யாவையும், தவ்ஹீதுல் அஸ்மாஇ வஸ்ஸிபாத் ஆகியவற்றை ஏற்றிருப்பினும் அவன் அல்லாஹ்வை நிராகரித்த ஒரு இணைவைப்பாளானாகக் கருதப்படுவான்.

உதாரணத்திற்கு ஒரு மனிதன் அல்லாஹ்வை உண்மையான படைப்பாளன், அதிகாரம் படைத்தவன், அனைத்து விடயங்களையும் மிகச் சிறப்பாக திட்டமிடுபவன் எனவும், அவனுக்கு தகுதியான அழகான திருநாமங்களும், பண்புகளும் உண்டு என்று ஈமான் கொண்டாலும் அவனின் இவ்விசுவாசம் பயனற்றது. அதே போல் ஒரு மனிதன் தவ்ஹீதுத் ருபூபிய்யாவையும்,

அஸ்மா வஸ்ஸிபாத்தையும் முழுமையாக ஏற்று கொண்டு சமாதிகளிடம் சென்று அதில் அடக்கப்பட்டவனை வணங்கி, அல்லாஹ்வை நெருங்குவதற்காக அவருக்கு குர்பானி கொடுப்பவன், அல்லாஹ்வை ஏற்காத ஓர் இணைவைப்பாளனும் நிரந்தர நரகவாதியுமாவான்.

நபி (ஸல்) அவர்கள் எதிர்த்துப் போராடிய இணை வைப்பாளர்களை பொருத்த வரையில் அவர்கள் தவ்ஹீதுர் ருபூபிய்யாவை அதாவது அல்லாஹ் தான் படைத்து பரிபாலிக்கும் இரட்சகன் என்பதை எவ்வித சந்தேகமுமின்றி ஏற்றிருந்தும் தவ்ஹீதுல் உலூஹிய்யாவை ஏற்றுக்கொள்ளாத காரணமாக அவர்களுடன் போராடியது மட்டுமல்லாமல் அவர்களின் உயிர்களுக்கும், உடமைகளுக்கும் எந்த உத்தரவாதத்தையும் அளிக்கவில்லை இந்த விடயத்தை இறை வேதத்தை வாசித்த அனைவருக்கும் புரிந்து கொள்ள முடியும் எனினும் இவர்கள் அல்லாஹ் வுடன் சேர்த்து பிறவற்றையும் வணங்கியதால் இறைநிராகரிப்பாளர்களாக மாறிவிட்டனர்.

தவ்ஹீதின் மூன்றாவது வகை தவ்ஹீதுல் அஸ்மாஇ வஸ்ஸிபாத் (توحيد الأسماء والصفات) “கண்ணிய மிக்க அல்லாஹ் அல்குர்ஆனில் அவனைப்பற்றி எவ்வாறு பெயரிட்டும், வர்ணித்தும் கூறியுள்ளானோ அவற்றிலும் அவனது தூதர் நபி ஸல் அவர்கள் மொழிந்த

ஆதாரபூர்வமான ஹதீஸ்களில் அல்லாஹ்விற்கு எந்தெந்தப் பெயர்களை பண்புகளைக் கூறி வர்ணித்து உள்ளார்களோ அவற்றைத் திரிபு படுத்தாமலும், இல்லையென்று மறுக்காமலும், உருவகப் படுத்தாமலும், உவமைக் கற்பிக்காமலும் நம்புவதன் மூலம் அவனை ஒருமைப்படுத்தி ஏற்றுக் கொள்வதாகும்.

ஆகையால் அல்லாஹ் தனக்கென குறிப்பிட்டி ருக்கும் பெயார்களையும், பண்புகளையும் உருவகப்படுத்தாமலும், உவமைக்கற்பிக்காமலும் (مجاز) மறைபொருள் கொள்ளாது (حقيقة) நேர்பொருளாக ஏற்றுக்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

இவ்வகையைப் பொருத்தவரை இஸ்லாமிய உம்மத்தில் உள்ள பல பிரிவினர்களும், இஸ்லாத்தை மார்க்கமாகக் கொண்டவர்களும் பல விதத்திலும் வழிதவறியுள்ளதை அவதானிக்க முடிகிறது. அவர்களில் ஒரு பிரிவினர் அல்லாஹ்வைத் தூய்மைப்படுத்தும் முகமாக அவனுக்கு பெயர்களும்; பண்புகளும் கிடையாது என முற்றாக மறுத்து இஸ்லாமிய வரம்பை விட்டு வெளியில் செல்லுமளவுக்கு அதிதீவிர கருத்தை கடைப்பிடித்தனார். இன்னும் ஒரு பிரிவினர் இதில் நடுநிலைப்போக்கைக் கையான்டனர். மற்றும் ஒரு பிரிவனர் அஹ்லுஸ்ஸுன்னாவிற்கு நெருக்கமான கருத்துக்களை வெளியிட்டனார். என்றாலும் இவ்விடயத்தில் ஸலபுகளை பொருத்தவரை “அல்லாஹ் தன்னை

எவ்வாறு பெயரிட்டு பண்புகளைக் கூறி அழைத்துள்ளானோ அவற்றை அதே விதத்தில் எவ்வித திரிபு படுத்தலு மின்றியும், மறுத்துரைக்காமலும், உருவகப்படுத்தாமலும், உவமை கூறாமலும் ஏற்றுக்கொள்வதைத்தான் வழிமுறையாகக் கொண்டுள்ளனர்.

இப்பகுதியை ஒரு சில உதாரணங்களுடன் விளக்க முற்படுகின்றேன். அதாவது அல்லாஹ் தனக்கு நித்திய ஜீவன் என்ற பெயரை வைத்துள்ளான். எனவே இப்பெயரை நாம் الحي என்ற அல்லாஹ் வின் பெயரில் நிறைவான பூரண வாழ்வு எனும் பண்பு உள்ளடங்கியுள்ளது. எனவே இதிலிருந்து நித்தியமும் நிறைவானதுமான வாழ்வு அல்லாஹ் வுக்குரியது என ஈமான் கொள்ள வேண்டும்.

அதே போன்று அல்லாஹ் அஸ்ஸமீஉ – நன்றாகக் கேட்கக் கூடியவன் அல் அலீமு யாவற்றையும் நன்கறிந்தவன். எனும் பெயர்களை குறிப்பிட்டி ருக்கிறான். அவைகள் இரண்டும் அல்லாஹ்வின் திருநாமங்களாகும். அதே வேளை இப்பெயர்கள் பண்புகளான கேட்டல், அறிதல் போன்றவற்றை கொண்டிருக்கின்றன ஆகவே கேட்டல் அறிதல் எனும் பண்புகளைக் அவன் பெறாமல் இத் திருநாமங்களை பெற்றிருப்பது சாத்தியமற்றது.

இன்னொரு உதாரணத்தையும் குறிப்பிடுகின்றேன். அல்லாஹ் தனது திரு மறையில் “அல்லாஹ்வின் கை

கட்டப்பட்டுள்ளது. என்று யூதர்கள் கூறுகிறார்கள். அவர்களின் கைகளே கட்டப் பட்டுள்ளன. மாறாக அவனின் இரு கைகளும் விரிக்கப்பட்டே உள்ளன.

அல்லாஹ் இத்திருவசனத்தில் தனக்கு விரிந்த இரு கைகள் உள்ளன என குறிப்பிடுகின்றான். விரிந்த என்பது இங்கு தாராளமான வாரிவழங்கக் கூடிய என பொருள் படும். ஆகவே நாம் அல்லாஹ்விற்கு அருள்கள் நிறைந்த இரு கைகள் உள்ளன என ஈமான் கொள்ளல் வேண்டும். ஆனால் எமது உள்ளங்களிலோ, அல்லது கற்பனைகளிலோ எமது நாவுகளாலோ ஒரு போதும் அக்கைகளை உருவகப்படுத்தி உவமானம் கூற முற்படக் கூடாது. ஏனெனில் அல்லாஹ் “அவனைப் போன்று எதுமில்லை அவன் நன்கு செவிமடுக்க கூடியவனாகவும், யாவற்றையும் நன்கு பார்க்கக் கூடியவனாகவும் உள்ளான் என குறிப்பிடுகின்றான்.

மேலும் அல்லாஹ் தனது திருமறையில் “மானக் கேடானவற்றில் பகிரங்கமானவற்றையும், மறைவானவற்றையும், நேர்மைக்கு மாறாக வரம்பு மீறுவதையும், எவ்வித ஆதாரத்தையும் அல்லாஹ் இறக்காமல் இருக்கும் போது அவனுக்கு இணை வைப்பதையும், அல்லாஹ் வின் மீது நீங்கள் அறியாதவற்றைக் கூறுவதையுமே எனது இரட்சகன் தடுத்துள்ளான் என நபியே நீர் கூறுவிராக.

மேலும் அல்லாஹ் மீது உமக்கு எது பற்றி அறிவில்லையோ அதை நீ பின்பற்ற வேண்டாம். பார்வை செவிப்புலன் ஆகிய இவை ஒவ்வொன்றும் விசாரிக்கப்படக்கூடியதாக உள்ளது .

எவனொருவன் அல்லாஹ்வின் இரு கைகளையும் அடியார்களின் கைகளுக்கு உவமை கூற முயற்சிக்கின்றானோ அவன் அல்லாஹ்வின் கூற்றான ""அவனைப் போன்று எதுமில்லை அவன் நன்கு செவிமடுக்ககூடியவனாகவும், யாவற்றையும் நன்கு பார்க்கக்கூடியவனாகவும் உள்ளான் என்ற வசனத்தை பொய்ப்பித்து "அல்லாஹ்வுக்கு நீங்கள் உதாரணம் கூறாதிர்கள் என்ற இறைவசனத்திற்கு முரணாக நடந்த ஒருவனாக மாறி விடுகின்றான்

அதே போல் அல்லாஹ்வின் கைகளை எவனொருவன் குறிப்பிட்ட வடிவத்திற்கு உருவகப் படுத்துகின்றானோ அவன் அறிவில்லா ஒரு விடயத்தை கூறி அல்லாஹ்வின் மீது இட்டுக் கட்டியவனாக மாறிவிடுகின்றான்.

## தவ்ஹீத் அல் அஸ்மா வஸ்ஸிபாத்தின் முக்கியத்துவம்

கேள்வி : மதிப்புக்குரிய அறிஞர் அவர்களே! தவ்ஹீதின் இறுதிப்பிரிவான தவ்ஹீத் அல் அஸ்மா வஸ்ஸிபாத் குறித்து விரிவான ஒரு தெளிவை வழங்க முடியுமா?

பதில்: உண்மையில் தவ்ஹீத் அல் அஸ்மா வஸ்ஸிபாத்தைப் பொருத்தவரை அதன் முக்கியத்துவம் கருதியும், மற்றும் இஸ்லாமிய உம்மத் இந்த விடயத்தில் பல பிரிவுகளாக பிரிந்து கிடப்பதன் காரணங்களினாலும் விரிவாக விளக்கப்பட வேண்டியது அவசியமாகும். இந்த விடயத்தில் அல்லாஹ் முஃமின்களில் ஸலபுகளுக்கும், அவர்களின் நிலைப்பாட்டை பின்பற்றியவர்களுக்கும் நேரான வழியைக் காட்டினான். அல்லாஹ், தான் நாடியவர்களுக்கு நேர்வழியை காண்பிக்கப் போதுமானவன்.

ஏற்கனவே நான் தவ்ஹீத் அல் அஸ்மா வஸ்ஸிபாத் பற்றி விளக்கிய போது இதற்கான ஒரு அடிப்படை விதி பற்றி குறிப்பிட்டேன் .அதாவது அல்லாஹ் தனக்கென குறிப்பிட்ட பெயர்கள், பண்புகள், அவனின் தூதர் அவனுக்கு இருப்பதாக குறிப்பிட்ட பெயர்கள், பண்புகள் அனைத்தையும் அதன் கருத்திலும் சொல்லிலும் திரிபை ஏற்படுத்தாமலும், உருவம் கற்பிக்காமலும் உதாரணம் கூறாமலும், அதற்குரிய விதத்தில் மறைபொருள் கொள்ளாமல் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதாகும். இக்கருத்தை விளக்குவதற்கு அல்லாஹ்விற்குரிய பெயர்களில் சில உதாரணங்களையும் அவனின் பண்புகளில் ஒன்றான அவனின் இரு கைகள் குறித்தும் குறிப்பிட்டேன்.

அதே போல் அல்லாஹ்வுக்குரிய பெயர்களைப் பொருத்த வரை அப்பெயர்கள் யாவும் அவனின் பெயரொன்றை பெற்றிருப்பதை உறுதிப் படுத்துவதுடன் அவனின் பண்பையும் உள்ளடக்கியுள்ளது. அதன் விளைவாக அது வேண்டி நிற்கும் நுட்பங்களையும் கொண்டிருக்கிறது என ஏற்று உறுதிப்படுத்துவது நம்மீதுள்ள கடமையாகும்.

நான் மேலே குறிப்பிட்டது போன்று அல்லாஹ் தனக்கென குறிப்பிட்ட பண்புகளை அதற்குரிய விதத்தில் நேர்பொருள் (الحقيقة) கொண்டு ஏற்றுக் கொள்வதே எம்மீதுள்ள கடமையாகும்.

அதேபோல் ஏற்கெனவே நான் சுட்டிக் காட்டிய விடயமான அல்லாஹ்வுக்கு இரு கைகள் உள்ளன எனக் குறிப்பிடுவது அதனை அதற்குரிய விதத்தில் படைப்பினங்களோடு ஒப்பிடாது ஏற்றுக்கொள்வதே கடமை யாகும். அவ்வாறு ஏற்றுக் கொள்ளாவிடின் அவன் அல்லாஹ்வின் திருவசனமான அவனைப் பேன்று எவருமில்லை. அவன் நன்கு

செவிமடுப்பவனாகவும், பார்க்கக் கூடியவனாகவும் உள்ளான் என்பதை மறுத்துப் பொய்ப்பிக்கின்றவன், அல்லது அல்லாஹ்வுக்கு நீங்கள் உதாரணங்களைக் கூறாதீர்கள் என்ற அல்குர்ஆனிய வசனத்திற்கு கட்டுப்படாது மாறு செய்கிறவன் என்பதுவே உண்மையாகும்.

அதே வேளை அவனுக்கு உருவம் கற்பித்தல் ( التكييف ) எனும் விடயத்தைப் பொருத்தவரை அல்லாஹ் தடுத்து ஹராமாக்கிய விடயத்தை செய்வதற்கு ஒப்பானதாகும். இது குறித்து அல்லாஹ் பின்வரும் வசனங்களில் எச்சரிக்கின்றான். "மானக்கேடானவற்றில் பகிரங்கமான வற்றையும் மறைவானவற்றையும், உரிமையின்றி வரம்பு மீறுவதையும், எவ்வித ஆதாரத்தையும் அல்லாஹ் இறக்காமல் இருக்கும் போது அவனுக்கு இணை வைப்பதையும், அல்லாஹ்வின் மீது நீங்கள் அறியாதவற்றைக் கூறுவதையுமே எனது இரட்சகன் தடுத்துள்ளான்" என நபியே நீர் கூறுவிராக.

மேலும் அல்லாஹ் "உமக்கு எது பற்றி அறிவில்லையோ அதை நீர் பின்பற்ற வேண்டாம். பார்வை செவிப்புலன் ஆகிய இவை ஒவ்வொன்றும் விசாரிக்கப்படக் கூடியதாக உள்ளது." .

அல்லாஹ் தனக்கென குறிப்பிட்டிருக்கும் பண்புகளில் மேலதிக விளக்கத்திற்காக இரண்டாவது ஒரு உதராணத்தையும் கூறிப்பிட விரும்புகிறேன். அது தான் "இஸ்திவா" பற்றியதாகும். அல்லாஹ் தன்னுடைய உயர்வுக்கும், கண்ணியத்திற்கும் தக்கவாறு அர்ஷுக்கு மேல் உயர்ந்துள்ளான். இந்தக் கருத்தை குர்ஆனில் அல்லாஹ் ஏழு இடங்களில் குறிப்பிட்டுள்ளான் .அரபு மொழியில் 'استوى' என்ற சொல்லானது '(على)' எனும் முன்னிடைச் சொல்லுடன் வந்தால் அச்சொல்லானது

“உயர்ந்தான், மேலால் இருந்தான்” என்ற கருத்துக்களைக் காட்டும். எனவே அல்லாஹ்வின் திருவசனமான الرحمن على العرش استوى என்பதற்கான கருத்து “அல்லாஹ் அர்ஷின் மீது தன் கண்ணியத்திற்கு தக்கவாறு உயர்ந்துவிட்டான்.” என்பதாகும். இது அல்லாஹ் மாத்திரம் பெற்றிருக்கும் உயர்வாகும். அத்துடன் இப்பிரபஞ்சங்களுக்கு மேலால் இருத்தல் என்ற விடயத்திற்கும், மனிதன் கட்டிலுக்கு மேலால் இருத்தல், மிருகங்களுக்கு மேலால் இருத்தல், கப்பலின் மேல் இருத்தல் போன்ற மனிதனின் செயல்களில் இருந்து முற்றிலும் வேறுபட்டது என்பதுவே இதன் அர்த்தமாகும். இந்த சொல்லானது மனிதர்களின் மேலே குறிப்பிட்ட செயல்களை பிரதிபலித்து வந்துள்ளதை பின்வரும் அல்லாஹ்வின் திருவசனம் காட்டுகிறது. “கப்பல்களிலும், கால்நடைகளிலும் நீங்கள் பயணிப்பவற்றை ஏற்படுத்தினான். அதன் முதுகுகளில் சரியாக அமர்ந்து கொள்வதற்காகவும், பின்னர் அவற்றின் மீது நீங்கள் அமர்ந்ததும், உங்கள் இரட்சகனின் அருளை நினைவு கூர்ந்து இதனை வசப்படுத்தித் தந்தவன் மிகத் தூய்மையானவன். இதற்கு நாங்கள் சக்தி பெற்றவர்களாக இருக்கவில்லை. மேலும் நாங்கள் எங்கள் இறைவனிடம் திரும்பிச் செல்லக் கூடியவர்களாவோம்.”

ஆகவே இத்திருவசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மனிதன் ஒரு பொருளின் மேலால் இருப்பது என்பது எந்த வகையிலும் அல்லாஹ் அர்ஷுக்கு மேலால் உயர்ந்திருக்கிறான் என்ற கருத்திற்கு ஒப்பானதாக இருக்க முடியாது. ஏனெனில் அல்லாஹ் அவனின் அனைத்து பண்புகளிலும், செயல்களிலும் அவனுக்கு ஒப்பாக எதுவுமில்லை என்ற கருத்தை அல்லாஹ் குறிப்பிட்டுள்ளான்.

அதே போல் استوى على العرش: என்பதற்கு “அர்ஷை அல்லாஹ் ஆக்கிரமித் துள்ளான்” என்ற கருத்தை வைப்பது அச்சொல்லுக்கான உரிய அர்த்தத்தை வழங்காது திருவுபடுத்துவதாகும். இது ஸஹாபாக்கள், தாபியீன்கள் கொண்டிருந்த ஏகோபித்த முடிவுக்கு முரணான கருத்தாகும். அத்துடன் இது பிழையான கருத்துக்களை கொள்வதற்கு வழிவகுப்பதாகவும் அமைந்து விடுகிறது. ஒரு முஃமின் இக்கருத்தை சொல்வது சாத்தியமற்ற விடயம். ஏனெனில் குர்ஆன் தெளிவான அரபு மொழியில் இறங்கியுள்ளது என்பதில் யாருக்கும் சந்தேகம் கிடையாது. இக்கருத்தை அல்லாஹ் “நீங்கள் புரிந்து கொள்வதற்காக அல்குர்ஆனை அரபு மொழியில் ஆக்கினோம்.” எனக் குறிப்பிடுகின்றான்.

ஆகவே استوى على العرش என்பதற்கு உண்மைப் பொருள் யாதெனில் அல்லாஹ் தனது தனித்துவத்துக்கும் மகத்துவத்துக்கும் ஏற்ப அல்லாஹ் அர்ஷின் மேல் உயர்ந்துள்ளான். அதாவது استولى என்ற சொல்லுக்கு ஆக்கிரமத்துள்ளான் என பொருள் கொள்ளக்கூடாது. இவ்வாராக பொருள் கொள்வது பின்வரும் தவறுகளுக்கு இட்டுச் செல்ல காரணமாய் அமையும் அவைகளாவன;

1- சொல்லின் கருத்தை திரிவு படுத்தியமை.

2- அரபு மொழி மரபுக்கு மாற்றமான கருத்தை வழங்கியமை.

3- ஸலபுகள், தாபியீன்களின் ஏகோபித்த முடிவுக்கு மாற்றமாக செயற்பட்டமை போன்றனவாகும்.

அத்துடன் அல்குர்ஆனிலும் ஸுன்னாவிலும் ஒரு சொல் இடம் பெற்று அச்சொல்லுக்கு முரணான கருத்து, அல்லது அதற்கான வியாக்கியானம் அவர்களால் (ஸலபுகளால்) குறிப்பிடப்படவில்லையாயின் அச் சொல்லானது மொழி ரீதியில் அடிப்படை கருத்தையே பிரதிபலிக்கும்.

ஏற்கெனவே குறிப்பிட்டது போன்று 'الاستواء' என்ற வார்த்தைக்கு 'استولى ' என்ற அதாவது ஆக்கிரமித்தான் என்ற கருத்தை குறிப்பிடின் அதன் விளைவாக பிழையான கருத்துக்கள் இடம் பெற வாய்ப்புகள் அதிகமாக உள்ளன. அந்த வகையில் “ஆக்கிரமித்தான்” என்ற கருத்தை பின்வரும் அல்குர்ஆன் வசனமாகிய “நிச்சயமாக உங்களின் இரட்சகன் அல்லாஹ், அவன்தான் வானங்களையும், பூமியையும் ஆறு தினங்களில் படைத்தான். பின்பு அர்ஷுக்கு மேல் உயர்ந்தான்.” என்ற திருவசனத்திற்கு பிழையான கருத்தை வழங்கும் ஆபத்தை ஏற்படுத்திவிடும். அதாவது வானங்கள் பூமியைப் படைக்கும் போது அர்ஷானது அல்லாஹ்வின் கட்டுப்பாட்டுக்குள் இருக்க வில்லை என்ற கருத்தை கொடுத்துவிடும். இது மேலே குறிப்பிட்ட 3 விடயங்களுக்கு வழிவகுத்திடும் ஆபத்தான நிலையாகும்.

## தவ்ஹீதின் வகைகளின் பாலுள்ள கடமை.

கேள்வி : தவ்ஹீதின் வகைகளின் பாலுள்ள கடமை யாது ?

தவ்ஹிதின் வகைகள் உள்ளடக்கியிருக்கும் எல்லா வகைகளையும் ஏற்றுக் கொள்வதும், அவைகள் குறிப்பிடும் கருத்துக்களை ஏற்று அல்லாஹ்வை ஒருமைப்படுத்துவதே இதன்பால் எம்முள்ள கடமையாகும்.

# அல்லாஹ் அல்லாதவற்றை வணங்குவதின் ஆபத்து - அபாயம்.

கேள்வி: இறைவனால் விதியாக்கப்பட்ட வணக்கங்களின் வகைகளில் ஏதாவது ஒன்றை அல்லாஹ் அல்லாத ஒன்றுக்கு செலுத்துவதன் மார்க்கத் தீர்ப்பு யாது?

பதில் : இதற்கான பதிலை நாம் குறிப்பிட்ட توحيد العبادة, توحيد الألوهية என்ற பகுதியிலிந்து புரிந்து கொள்ள முடியும். அதாவது "தவ்ஹீதுல் உலூஹிய்யா என்பது அல்லாஹ்வை வணக்கத்தின் மூலம் ஒருமைப் படுத்துவதாகும் என்பதே . அதாவது வணக்கங்களில் எந்த வகையாயினும் அல்லாஹ்வுக்கு மாத்திரமே செலுத்தல் வேண்டும். உதாரணமாக அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெற்றுக் கொள்வதற்காக மனிதன் குர்பானி கொடுப்பது ஒரு வணக்கமாகும் என்பது தெரிந்த விடயமாகும். இந்த வணக்கம் குறித்து அல்லாஹ் தனது திருமறையில் "உனது இரட்சகனுக்கு தொழுது அவனுக்கே அறுத்துப் பலியிடுவீராக". எனக் கூறுகிறான். எனவே அல்லாஹ்வை நெருங்குவதற்காக மேற்கொள்ளும் அனைத்தும் வணக்கங்களாகும். அதனை அல்லாஹ் அல்லாதவற்றுக்கு அவர்களை கண்ணியப்படுத்தி, மகிமைப் படுத்தும் முறையிலும், அவற்றை நெருங்க வேண்டும் எனும் நோக்கிலும் ஒரு மனிதன் மேற்கொள்கின்ற போது அவன் அல்லாஹ்வுக்கு இணைவைத்தவனாக மாறிவிடுகிறான். இதன் விளைவு அவனுக்கு சுவர்க்கம் ஹராமாக்கப்பட்டு நரகம் செல்வதற்கு இச்செயற்பாடு வழிவகுத்து விடுகிறது.

இதே போன்று இறைநேசர்கள் என நம்பி அவர்களின் நேசத்தைப் பெற்றுக் கொள்வதற்காக அவர்களின் சமாதிகளுக்கு செய்யும் குர்பானிகளின் நிலை இணை வைப்பு மட்டுமல்லாது, மார்க்கத்தை விட்டும் வெளியேற்றிவிடும் ஒரு மகா பாதகச் செய்கையாகும். ஆகவே இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுவோர் அவர்களின் இப்பாவச்செயலுக்காக அல்லாஹ்விடம் தவ்பா செய்து கொள்ளுமாறு உபதேசம் செய்கிறோம். அது மட்டுமல்லாமல் அவர்கள் அல்லாஹ்வுக்காக மாத்திரம் தொழுது நோன்பு பிடிப்பது போல், பலியிடுதல் எனும் வணக்கத்தையும் அல்லாஹ்வுக்கு மாத்திரம் மேற்கொள்ளுதல் வேண்டும். இவ்வாறு தவ்பா செய்து, வணக்கங்களை அல்லாஹ்வுக்கு மாத்திரம் செய்யும் போது அல்லாஹ் அவர்களின் பாவங்களை மன்னித்துவிடுகிறான். இதனை அல்லாஹ் "நபியே நிராகரிப்பாளர்களிடம் கூறுவீராக. இவர்கள் அசத்தியப் போக்கிலிருந்து அவர்கள் விலகிக்கொள்வார்களாயின் முன்பு செய்த குற்றங்கள் மன்னிக்கப்படும்". அல் அன்பால் 38

அது மாத்திரம் அல்ல. அவர்களின் தவறுகளை நன்மைகளாக மாற்றி அவர்களை கண்ணியப் படுத்துகிறான். இக்கருத்தை அல்லாஹ் பின்வருமாறு பிரஸ்தாபிக்கிறான் "மேலும் அவர்கள் அல்லாஹ்வுடன் வேறு கடவுளை அழைக்கமாட்டார்கள். அல்லாஹ் தடுத்துள்ள எந்தவோர் உயிரையும் நியாயமின்றி கொலை செய்யவும் மாட்டார்கள், மேலும் விபச்சாரம் புரிய மாட்டார்கள். யாரேனும் இச்செயல்களைச் செய்தால் அவன் தன் பாவத்திக்கான கூலியைப் பெற்றே தீருவான். மறுமை நாளில் அவனுக்கு இரட்டிப்புத் தண்டனை வழங்கப்படும். மேலும் அதிலேயே இழிவுக் குரியவனாக என்றென்றும் அவன் வீழ்ந்து கிடப்பான். ஆனால் இந்தப் பாவங்களுக்குப் பின்னர் எவர்கள்

மன்னிப்புக்கோரி மேலும் நம்பிக்கை கொண்டு நல்லறமும் புரிகின்றார்களோ அவர்களுக்கு அல்லாஹ் அவர்களின் பாவங்களை நன்மைகளாக மாற்றுவான். அல்லாஹ் மன்னிப்போனும், நிகரற்ற அன்புடையோனுமாக உள்ளான்.

ஆகவே சமாதிகளிடத்தில் பலியிட்டு அதில் அடக்கப்பட்டவர்களின் நெருக்கத்தை பெற நாடுபவர்களுக்கு எனது உபதேசம் யாதெனில் இச்செயலை முற்றாகத் தவிர்த்து அல்லாஹ்விடம் தவ்பா செய்து இம்மாபாதகச் செயலை செய்வதை விட்டு விடுங்கள், அல்லாஹ் தவ்பாச் செய்பவர்களின் தவ்பாவை ஏற்று, அவர்களின் இச்செயற்பாட்டால் சந்தோசமடைகிறான்.

## இரு ஷஹாதாக் கலிமாக்களின் பொருள்

கேள்வி:شهادة أن لا اله الا الله وأن محمد ا رسول الله "அல்லாஹ்வைத் தவிர உண்மையான இறைவன் வேறு ஒருவனும் இல்லை, நபி முஹம்மத் ஸல் அவர்கள் அல்லாஹ்வின் தூதர் ஆவார் என சாட்சி கூறுதல் என்பதன் கருத்தை தெளிவு படுத்த முடியுமா?

பதில் : அஷ்ஷஹாததான் الشهادتان என்பது شهادة أن لا اله الا الله وأن محمد ا رسول الله என்பதைக் குறிக்கிறது. அதாவது அல்லாஹ்வைத் தவிர உண்மையான இறைவன் வேறு ஒருவனும் இல்லை, நபி முஹம்மத் ஸல் அவர்கள் அல்லாஹ்வின் தூதர் என சாட்சி கூறுதல் என்பது இதன் அர்த்தமாகும். இவ்விரண்டு கலிமாக்களும் இஸ்லாத்தின் திறவுகோளாகும். இக்கலிமாக்கள் இன்றி இஸ்லாத்தில் எவரும் நுழையவும் முடியாது. இதன் காரணமாகத்தான் முஆஸ் (ரழி) அவர்களை நபி (ஸல்) அவர்கள் யெமனுக்கு அனுப்பி வைக்கும் போது அவருக்கு குறிப்பிட்ட

முதல் விடயமாக "நீ அங்கே சென்றதும் அவர்களை முதலில் அல்லாஹ்வை தவிர உண்மைக் கடவுள் வேறு யாருமில்லை என்றும், முஹம்மத் நபி ஸல் அவர்கள் அல்லாஹ்வின் தூதர் என்றும் சாட்சி கூறுவதின் பால் அழைக்க வேண்டும்" என்றும் பணித்தார்கள்.

ஆகவே ஷஹாதாக் கலிமாவின் முதல் பகுதியினைப் பொருத்தவரை ஒரு மனிதன் அல்லாஹ்வைத் தவிர வேறு உண்மைக் கடவுள் எவறுமில்லை என்பதை தனது நாவினால் மொழிந்து உள்ளத்தால் ஏற்றுக் கொள்வதை குறிக்கும்.

لا اله الا الله என்ற வாசகமானது இரு அடிப்படை விடயங்களை உள்ளடக்கியுள்ளது. அவை نفي "நிராகரித்தல்" اثبات "உறுதிப்படுத்தல்" என்பவையாகும். "لا اله ' என்பதற்கு எந்த ஒரு உண்மைக் கடவுளும் இல்லை என்பது. இதன் பொருள். இதனையே நப்யு என அரபியில் வழங்குவர். நிரகரித்தல் அல்லது ஒப்புக்கொள்ளாமல் இருத்தல் என்பது இதன் பொருள். الا الله என்பது இதன் இரண்டாவது பகுதியாகும் இதற்கு அல்லாஹ்வைத் தவிர என்பதாகும். இப்பகுதியை "இஸ்பாத்' உறுதிப்படுத்தல் என்பது குறிக்கிறது. ஆகவே இதன் இலக்கன ஒழுங்கிற்கமைய لااله الا الله ' என்பதின் கருத்து யாதெனில் "அல்லாஹ்வைத் தவிர உண்ணமைக் கடவுள் வேறு எவருமில்லை" என்பதாகும். இக்கருத்து இரண்டு விடயங்களை உள்ளடக்கியுள்ளது.

1- வணக்கத்தை அல்லாஹ்வுக்கு மாத்திரம் தூய்மையாக நிறைவேற்றல்.

2- அல்லாஹ்வைத் தவிர உள்ளவை வணக்கத்திற்கு தகுதியற்றவை என்பதை ஏற்று நடத்தல் என்பவையாகும்

இங்கே இன்னொரு விடயத்தையும் குறிப்பிடுகிறேன். அதாவது لا الله الا الله என்ற வார்த்தை இறைமைத்துவம் அல்லது வணங்கப்படும் கடவுள்கள் அல்லாஹ்வைத் தவிர உள்ளனரே, அவைகள் அனைத்திற்கும் آلهة என்றே அதாவது இறைமைத்துவத்தைப் பெற்ற கடவுள்கள் என அல்லாஹ் குறிப்பிட்டுள்ளான் என சிலர் சந்தேகிக்கின்றனர். உதாரணத்திற்கு பின்வரும் இறைவசனத்தில் "மேலும் உம் இறைவனின் கட்டளை வந்துவிட்ட போது அல்லாஹ்வை விடுத்து அவர்கள் அழைத்த வண்ணமிருந்த அவர்களுடைய கடவுள்கள் அவர்களுக்கு எந்தப் பயனும் அளிக்கவில்லை. மேலும் அல்லாஹ்வுடன் சேர்த்து இன்னொரு கடவுளை ஆக்கிவிடவேண்டாம்." இந்த வசனங்கள், மற்றும் நபிமார்கள் தம் சமூகத்தை நோக்கி அல்லாஹ்வை வணங்குங்கள் அவனைத் தவிர வேறு கடவுள் கிடையாது என வந்துள்ள அல்குர்ஆன் வசனங்கள் அல்லாஹ் அல்லாதவற்றுக்கும் கடவுள் தன்மை இருப்பதாக பிரஸ்தாபிக்கிறதா? என வினவுகிறார்கள். அதற்கான விடையை சுருக்கமாக பின்வருமாறு குறிப்பிட முடியும். அதாவது அல்லாஹ் அல்லாத கடவுள்கள் இருக்கின்றனர். அவைகள் உண்மைக் கடவுள்கள் கிடையாது. எனவே நாம் குறிப்பிட்ட உண்மைக் கடவுள் அல்லாஹ் மாத்திரமே என்பதற்கான ஆதாரம் பின்வருமாறு. இவற்றுக்குக் காரணம் அல்லாஹ்வாகும். அவன் சத்தியமானவன் என்பதுவும், அவனைத் தவிர இவர்கள் வணங்குபவை அனைத்தும் அசத்தியமானவை என்பதும், மேலும்

அல்லாஹ்வே உயர்ந்தவனமாகவும் மேலானவனாகவும் உள்ளான். மேலும் அல்லாஹ் குறிப்பிடுகையில்,

“மேலும் நீங்கள் பார்த்தீர்களா இந்த, “லாத், உஸ்ஸா” மற்றும் மூன்றாவது தேவதையான மனாத் ஆகியவற்றின் உண்மை நிலை பற்றி சிந்தித்தது உண்டா? ஆண்மக்கள் உங்களுக்கும், பெண்மக்கள் இறைவனுக்குமா? இது ஒரு மோசமான பங்கீடாகும். உண்மையில் இவையெல்லாம் நீங்களும் உங்கள் மூதாதையர்களும் வைத்துக் கொண்ட பெயர்களே அன்றி வேறில்லை. இறைவன் இதற்கென எந்வோரு சான்றாதாரத்தையும் இறக்கி வைக்கவில்லை (அந் நஜ்ம் 19-23)

இவ்வசனங்கள் யாவும் நாம் குறிப்பிட்டது போல உண்மைக் கடவுள் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை. மற்ற கடவுள்கள் யாவும் பொய்யானவை என்பதை சுட்டிக் காட்டுவது மட்டுமல்லாமல் உண்மை இறைமைத்துவம் அல்லாஹ்விற்கு மாத்திரமே எனும் உண்மையை எடுத்துக்காட்டுகிறது.

## முஹம்மத் (ஸல்)அவர்கள் அல்லாஹ்வின் தூதர் என சான்று பகர்தல் என்பதன் கருத்து

கேள்வி: முஹம்மத் (ஸல்)அவர்கள் அல்லாஹ்வின் தூதர் என சான்று பகர்தல் என்பதன் கருத்து யாது?

பதில்: முஹம்மத் ஸல் அவர்களை தூதர் என நாவால் மொழிந்து, அங்கீகரித்து, உள்ளத்தால் விசுவாசித்து, அவர்கள்தாம் முழு மனித, ஜின் குலத்துக்கும் இறைதூதர் என்பதை ஏற்றுக் கொள்ளுதலே இந்த ஷஹாதாக் கலிமாவின் கருத்தாகும்.

“மனிதர்களே! நிச்சயமாக நான் உங்கள் அனைவருக்குமான அல்லாஹ்வின் தூதராவேன். வானங்கள் மற்றும் பூமியின் ஆட்சி அவனுக்கேயுரியன. (உண்மையாக) வணங்கப்படத் தகுதியானவன் அவனைத்தவிர வேறு யாருமில்லை. அவனே உயிர்ப்பிக்கிறான் இன்னும் மரணிக்கச் செய்கிறான் என்று (நபியே) நீர் கூறுவீராக ஆகவே நிங்கள் அல்லாஹ்வையும் (எழுத்தறிவற்ற),உம்மி நபியாகிய அவனது தூதரையும் நம்பிக்கை கொள்ளுங்கள். அவரும் அல்லாஹ்வையும் அவனது வார்த்தைகளையும் நம்பிக்கை கொள்கிறார். நீங்கள் நேர்வழி பெறும் பொருட்டு அவரையே பின்பற்றுங்கள்.” (அல் அஃராப் 158)

அகிலத்தாருக்கு எச்சரிக்கையாக இருப்பதற்காக (சத்தியத்தையும் அசத்தியத்தையும் பிரித்தறிவிக்கக் கூடிய இவ்வேதத்தை (புர்கானை) இறக்கிவைத்தவன் மிகவும் கண்ணியமிக்கவனாக உள்ளான்.

ஆகவே இந்த ஸஹாதாவை மொழிந்து ஏற்றுக்கொண்டவர் இப்பகுதி வேண்டி நிற்கும் மிக முக்கிய விடயங்களை ஏற்றுக் கொள்வது அவசியமாகும். அந்த வகையில் நபி (ஸல்) அவர்கள் அறிவித்தவற்றை உண்மைபடுத்தி, அவரின் கட்டளைகளுக்கு முழுமையாக அடிபணிந்து, அவர் தடுத்தவற்றை முழுமையாக தவிர்ந்து வாழ்வது மட்டுமல்லாமல் அவர் மார்க்கம் என வகுத்துத் தந்தவற்றின் மூலம் அல்லாஹ்வை வணங்குவதும் இந்தக் ஷஹாதா வலியுறுத்தும் செய்தியாகும். அது மட்டுமல்லாமல் அல்லாஹ்வுக்கு மாத்திரம் உரிய (ருபூபிய்யத்)திலும், பிரபஞ்சத்தை இயக்கி, நிர்வகிப்பதிலும் நபி (ஸல்) அவர்களுக்கு இறைமைத்துவம் இருப்பதாக நம்புவதும் தடுக்கப்பட்டுள்ளது. மாறாக அவர் ஒரு அல்லாஹ்வின் அடிமை என்றும், பொய் பேசாத ஒரு தூதர் என்றும், அல்லாஹ்வின்

நாட்டமின்றி எந்த பயனையும், தீங்கையும் பிறருக்கு செய்யும் அதிகாரத்தைப் தன்னில் பெறாதவர் எனவும் நம்புதல்தான் நபியவர்கள் அல்லாஹ்வின் தூதர் என ஏற்று சாட்சி கூறல் உள்ளடக்கியிருக்கும் பிரதான அம்சங்களாகும். இந்த உண்மையை பின்வரும் அல்லாஹ்வின் கூற்று உறுதிப்படுத்துகிறது.

“என்னிடம் அல்லாஹ்வின் பொக்கிஷங்கள் இருக்கின்றன என்று நான் உங்களுக்கு கூறமாட்டேன், மறைவானவற்றை நான் அறியவும் மாட்டேன். நிச்சயமாக நான் ஒரு வானவர் என கூறவும் மாட்டேன். எனக்கு வஹியாக அறிவிக்கப்பட்டதைத் தவிர நான் பின்பற்றுவதில்லை என நபியே நீர் கூறுவீராக.” (அல் அன்ஆம் 50)

எனவே இந்த வகையில் நபி (ஸல்) அவர்கள் ஒரு அடிமை, அவர் அல்லாஹ்வால் ஏவப்பற்றவற்றை பின்பற்றுபவர் என்பது தெளிவாகிறது.

அல்லாஹ் இவ்விடயத்தை மேலும் தெளிவு படுத்தும் விதமாக பின்வரும் வசனங்களை குறிப்பிடுகிறான்.

உங்களுக்கு யாதொரு தீமையையோ, நன்மையையோ செய்ய நிச்சயமாக நான் ஆற்றல் பெற மாட்டேன் எனக் கூறுவீராக.

அல்லாஹ்விடமிருந்து என்னைக் காப்பாற்ற நிச்சயமாக எவராலும் முடியாது. அவனையன்றி எந்தப் புகலிடத்தையும் நான் பெற்றுக்கொள்ள மாட்டேன் என்று நபியே நீர் கூறுவீராக. (அல் ஜின் 21 22)

அல்லாஹ் நாடினாலேத் தவிர எந்த நன்மையோ, எந்தத் தீமையோ எனக்கு நான் செய்துக் கொள்வதற்கு ஆற்றல் பெறமாட்டேன். நான் மறைவானவற்றை அறிந்தவனாக இருப்பின்

நன்மைகளையே அதிகரித்திருப்பேன். மேலும் எனக்கு எவ்விதத் தீங்கும் ஏற்பட்டிருக்காது. நான் எச்சரிக்கை செய்பவனாகவும், நம்பிக்கைக் கொள்ளும் சமூகத்திற்கு நன்மாராயம் கூறுபவனாகவுமே இருக்கின்றேன். என்று நபியே நீர் கூறுவீராக.

ஆகவே, இதுதான் நபியவர்கள் அல்லாஹ்வின் தூதர் என்று சான்று பகர்தலின் கருத்தாகும். அந்த வகையில் வணக்கத்துக்கு தகுதியானவன் அல்லாஹ் மாத்திரம் என்றும், அவனின் தூதரோ, படைப்பினங்களில் அவருக்கு கீழ் உள்ளவர்களோ வணங்க தகுதி பெறமாட்டார்கள் என்று ஏற்றுக் கொள்வதுடன் நபியவர்களுக்குரிய அந்தஸ்தைப் பேணுவதும் கடமையாகும்.

## ஷஹாதாவை நாவால் கூறி இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதற்கும், உள்ளத்தால் நம்பி ஏற்றுக் கொள்வதற்கு மிடையிலான வேறுபாடு.

14. ஷஹாதாவை நாவால் கூறி இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதற்கும், உள்ளத்தால் நம்பி ஏற்றுக் கொள்வதற்கு மிடையிலான வேறுபாடு என்ன?.

கேள்வி 15. அல்லாஹ்வை வணங்குவது பற்றிய ஒரு சந்கேம்.

கேள்வி 16. ஈமான் என்பதின் கருத்து

கேள்வி 17. நீங்கள் ஈமானுக்கு குறிப்பிட்ட வரைவிலக்கணம் ஜிப்பரில் அலை அவர்கள் நபி ஸல் அவர்களிடம் ஈமான் குறித்து கேட்டபோது நபி ஸல் அவர்கள் கூறிய கருத்தை பிரதிபளிக்கிறதா?

கேள்வி 18. ஒருவர் எம்மிடம் ஈமான் குறித்து கேட்கும் போது அவருக்கு 'ஏற்றுக் கொள்ளலையும், அடிபணிதலையும் வேண்டி நிற்கும் அங்கீகாரம்' எனக் கூறுவதா? அல்லது நபியவர்கள்

குறிப்பிட்டது போன்று அல்லாஹ்வையும், அவனின் மலக்குகளையும், தூதர்களையும், வேதங்களையும் விசுவாசம் கொள்வது எனக் கூறுவதா?

கேள்வி 19. ஈமான் குறித்த பதிலை விரிவாக விளக்குமாறு வேண்டுவதுடன், அர்கானுல் ஈமான் குறித்து அறிந்து கொள்ளவும் நாம் விரும்புகிறோம்.

ஷஹாதாவை நாவால் கூறி இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதற்கும், உள்ளத்தால் நம்பி ஏற்றுக் கொள்வதற்கு மிடையிலான வேறுபாடு.

(14) கேள்வி : ஷஹாதாக் "شهادة' கலிமாவை ஒருவர் நாவால் கூறி இஸ்லாத்தை ஏற்பதற்கும், உள்ளத்தால் மாத்திரம் ஏற்பதற்குமிடையிலான வேறுபாடு யாது? ஒருவர் ஷஹாதாக்கலிமாவைக் ஏற்றுக்கொள்ளும்போது மேற் குறிப்பிட்ட இரண்டையும் சேர்த்து ஏற்றுக் கொள்வது அவசியமாகுமா? தெளிவுபடுத்துமாறு வேண்டுகிறோம்.

பதில் : உண்மையில் இவையிரண்டிற்கும் மத்தியில் வேறுபாடு உண்டு என்பது மிகத்தெளிவான விடயமாகும்.இந்த விடயத்தில் இரு வகை மனிதர்கள் உள்ளனர் அவர்களில் ஒரு பிரிவினர் நயவஞ்சகர்கள். இவர்கள் ஷஹாதத்தை உள்ளத்தால் ஏற்காது மொழிவதன் மூலம் மாத்திரம் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்கள். இவர்கள் குறித்து அல்லாஹ் பின்வருமாறு குறிப்பிடுகின்றான். 'நயவஞ்சகர்கள் உன்னிடம் 'உண்மையில் நீங்கள் அல்லாஹ்வின் தூதர் என நாம் சாட்சி கூறுகின்றோம் எனக் கூறுகின்றனர்.

ஆனால் அல்லாஹ் அவர்கள் குறித்து பின்வருமாறு பிரஸ்தாபிக்கின்றான்

நீங்கள் அவனது தூதர் என்பதை அல்லாஹ் நன்கறிவான். நிச்சயமாக முனாபிக்குகள் பொய்யர்கள் என சான்று பகர்கின்றான்,'

இதுவே முனாபிக்களின் நிலையாகும் அவர்கள் வார்த்தைகளால் மாத்திரம் அல்லாஹ்வையும் அவனது தூதரையும் ஏற்றுக் கொண்டதாக குறிப்பிட்டாலும் அவர்கள் உள்ளத்தால் ஏற்றுக்கொள்வதில்லை என்பதுவே யதார்த்தமாகும்.

மற்றொரு வகை மனிதர்கள் ஷஹாதாவை மொழியாது உள்ளத்தால் ஏற்றுக் கொள்பவர்கள். இவ்வேற்றுக்கொள்ளுதல் உண்மையான ஏற்றலாக அமையமாட்டாது. இதன் உண்மையான முடிவு பற்றி அல்லாஹ்வே நன்கறிந்தவன். ஆனால் இவ்வுலகில் இவ்வேற்றுக்கொள்ளுதல் எவ்விதப் பயனையும் தரமாட்டாது என்பதுடன்,நாவால் மொழிந்து ஏற்றுக்கொள்ளும் வரையில் அவர் இஸ்லாத்தை ஏற்றவராக கருதப்படவும் மாட்டார். இந்த வகையில் ஒருவர் ஷஹாதாக் கலிமாவை நாவால் மொழிந்து உள்ளத்தாலும் ஏற்றுக் கொள்வதே சரியான முறையாகும்.

## ஒரு சந்தேகமும் அதற்கான பதிலும்

(15) கேள்வி: மதிப்புக்குரிய அறிஞர் அவர்களே! மனிதர்களில் ஒரு பிரிவினர் உள்ளனர் அவர்களை அல்லாஹ்வை வணங்குவதற்காக அழைத்தால் அவர்கள் கூறுவதெல்லாம் அல்லாஹ் உள்ளத்தின் இரட்சகனாக உள்ளான் என பதிலளிக்கின்றனர். இது குறித்த உங்கள் கருத்தை எதிர்பார்க்கின்றோம்.

பதில்: உண்மையில் அல்லாஹ் உள்ளங்களின் இரட்சகன் மாத்திரமல்ல வார்த்தைகளினதும் இரட்சகன் என்பதைக் அவர்களுக்கு கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஏனெனில் உள்ளங்ள் சீராகிவிட்டால் முழு உடலும் சீராகி விடும் என நபி (ஸல்) அவர்கள் குறிப்பிடுகிறார்கள் 'உடம்பில் ஒரு சதைக்கட்டி உள்ளது. அது சீராகிவிட்டால் உடலின் அனைத்துப் பகுதிகளும் சீராகிவிடுகின்றது. அது கெட்டுவிட்டால் உடலின் அனைத்துப் பகுதிகளும் கெட்டு விடும். அதுதான் உள்ளம் என்றார்கள்.

இந்த ஹதீஸ் இவ்வாறு குதர்க்கம் பேசுவோரின் கருத்துக்களை கண்டிக்கிறது. அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு மாறுசெய்து நடக்கும் சிலருக்கு அவர்களின் நலன் கருதி உபதேசித்தால், தங்களது மார்பைக் காட்டி “இறையச்சம் இங்கே உள்ளது” என கூறுவர். உண்மையில் அவர் குறிப்பிட்ட வார்த்தை உண்மைதான், ஆனாலும் அவ்வார்த்தையின் மூலம் பிழையான கருத்தை நாடியிருக்கிறார். இது போன்றுதான் மேலே குறிப்பிட்ட அல்லாஹ் உள்ளங்களின் இரட்சகன் எனும் வார்த்தையுமாகும்.

இவ்வாறுதான் இணைவைப்பாளர்களின் நிலைப்பாடும் இருந்தது. அவர்களும் தங்களது இணைவைப்பை நியாயப்படுத்துவதற்காக அல்லாஹ் நாடியிருந்தால் நாம் இணைவைத்திருக்க மாட்டோம் எனக் குறிப்பிடும் கூற்றை பின்வருமாறு அல்லாஹ் குறிப்பிடுகின்றான். “அல்லாஹ் நாடியிருந்தால் நாங்கள் இணை வைத்திருக்கமாட்டோம். எங்கள் மூதாதையர்களும் இணை வைத்திருக்க மாட்டார்கள். மேலும் நாம் எப்பொருளையும் தடைசெய்திருக்கவும் மாட்டோம் எனக் கூறுவார்கள்.”

ஆகவே இவர்களின் கூற்றானது உண்மையாகும். ஆனால் அவர்களின் இணைவைப்பை நியாயப்படுத்தவும், இறைத்

தண்டணையிலிருந்து தப்பித்துக் கொள்ளவுமே இவ்வாறான நிலைப்பாட்டை அவர்கள் கொண்டிருந்தார்கள்.

எனவே உபதேசம் செய்யும் போது அதனை செவிமடுப்பவர், இறையச்சம் இங்குதான் உள்ளது என தனது உள்ளத்தை சுட்டிக்காட்டினால் அவரும் உண்மையான வார்த்தையைத் தான் கூறியிருக்கிறார். அதன் மூலம் அவர் குறிப்பிட எத்தனித்த கருத்து பிழையானது. நபியவர்கள் குறிப்பிட்டது போன்று உடலில் ஒரு சதைக்கட்டி உள்ளது அது சீராகி விட்டால் உடலின் அனைத்துப் பகுதிகளும் சீராகி விடும் என்ற கூற்றானது உள்ளத்தில் இறையச்சம் இருந்தால் அது உடலின் உருப்புக்களிலும் பிரதிபளிக்க வேண்டும், மொத்தத்தில் வெளிப்படையான செயற்பாடானது மறைமுகமான செயற்பாட்டின் அடையாளம் என்பதுவே யதார்த்தமாகும்.

## ஈமான் என்பதின் கருத்து

(16) கேள்வி: ஈமானின் கருத்தையும் அதன் முக்கிய அடிப்படைகளையும் (அர்கான்களையும்) சுருக்கமாக குறிப்பிட முடியுமா?

பதில்: ஈமான் என்ற சொல்லுக்கு இரு கருத்துக்கள் உள்ளன. ஒன்று மொழி ரீதியானது, மற்றொன்று மார்க்க ரீதியானது (ஷரீ ஆ ரீதியிலானது). ஒரு விடயத்தை நம்பி உண்மைப்படுத்தல் இதன் மொழிக் கருத்தாகும் .ஷரீ ஆவின் பார்வையில் மனதால் ஏற்று கட்டுப்படுதலை இது குறிக்கும். உதாரணத்திற்கு ஒரு மனிதன் முஹம்மத் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதர் என ஏற்றுக்கொண்டு அவர் கொண்டு வந்ததை ஏற்காது அவரின் கட்டளைகளுக் அடிபணியாது இருந்தால் அவன் முஃமின் என கருதப் படுவதில்லை. இன்னும் விளக்கமாக குறிப்பிட்டால் இணை வைப்பாளர்களில் பலர் அல்லாஹ்வின் தூதர் என நம்பியதோடு அவரின் இறைதூதையும் ஏற்றிருந்தனர். ஆனாலும் அவரின் கட்டளைகளை ஏற்று நடக்கவில்லை. ஆகையால் இவ்வாறான ஏற்றுக்கொள்ளல் எவ்விதத்திலும் பலனளிக்க வில்லை என்பதே உண்மையாகும்.

அத்துடன் மொழிரீதியாக ஈமான் எனும் சொல் கொண்டிருக்கும் கருத்தை விடவும் ஷரீ ஆ ரீதியாக பிரத்தியேகமான ஒரு கருத்தைப் பெற்றிருக்கின்றது. அதுதான் மொழி ரீதியாக குறிப்பிடப்படும் "ஒரு விடயத்தை உண்மைப்படுத்துதல்" என்ற கருத்தை விடவும் விரிந்த ஒரு கருத்தை அவ்வார்த்தைப் பெற்றிருப்பதாகும். உதாரணத்திற்கு தொழுகை என்பது ஈமானிய அம்சங்களில் ஒன்றாகும் . 'பின்வரும் குர்ஆன் வசனம் இக்கருத்தை பிரதிபளிக்கிறது, ' அல்லாஹ் உங்களது ஈமானை

பயனற்றதாக ஆக்கி விடமாட்டான். இந்த வசனத்தில் வந்துள்ள ஈமான் எனும் வார்த்தை பைத்துல் மக்திஸை நோக்கி தொழுதலைக் குறிக்கிறது. ஆனால் தொழுகைக்கு ஈமான் என்று சொல்வதில்லை ஏனெனில் அது வெளிப்படையான ஒரு அமல் என்பதினாலாகும். ஈமான் என்பது உள்ளத்தோடு தொடர்பான விடயம் என்பதை நாம் அறிந்திருக்கிறோம் .

இறுதியாக ஈமான் எனும் சொல்லை ஷரீஆ ரீதியாக வரைவிலக்கணப் படுத்தினால் பின்வருமாறு குறிப்பிடலாம்.

“ஏற்றுக்கொள்ளலையும், கட்டுப்படுதலையும் ஈமான் என்கிறோம்.” இக்கருத்தை ஏற்காதவன் முஃமினாக கருதப்படமாட்டான்.

**ஈமான் என்ற வார்த்தைக்கு குறிப்பிட்ட வரைவிலக்கணமான “ஷஹாதாவை ஏற்று கட்டுப்படுதல் என்ற கருத்தும், ஜிப்ரீல் அலை அவர்களின் ஹதீஸோடு உள்ள அதன் தொடர்பும்.**

(17) கேள்வி: நீங்கள் ஈமானுக்கு குறிப்பிட்ட வரைவிலக்கணம் ஜிப்பரில் அலை அவர்கள் நபி ஸல் அவர்களிடம் ஈமான் குறித்து கேட்டபோது நபி ஸல் அவர்கள் கூறிய கருத்தை பிரதிபளிக்கிறதா?

பதில்: ஆம். ஏனெனில் அல்லாஹ்வையும், அவனது மலக்குகளையும், வேதங்களையும், தூதர்களையும் உண்மையாக ஈமான் கொள்வது என்பது ஷஹாதாவை ஏற்று அதன் கருத்துக்களுக்கு கட்டுப்படுவதனை வலியுறுத்துகிறது. ஒருவன் தன்னை ஒரு முஃமின் எனக் கூறி மனதால் விசுவாசம் கொள்ளாது அது வலியுறுத்தும் கருத்துக்கும் அடிபணியாது இருந்தால் அவன் தன்னை முஃமின் எனக் குறிப்பிடுவதில் எவ்விதப் பயனுமில்லை.எனவே ஒருவன் முஃமின் என தன்னை

குறிப்பிடுவாயின் ஏற்றுக் கொள்ளலுடன் அடிபணிதல் என்பதும் அவசியமாகும்.

(18) கேள்வி: ஒருவர் எம்மிடம் ஈமான் குறித்து கேட்கும் போது அவருக்கு 'ஏற்றுக் கொள்ளலையும், அடிபணிதலையும் வேண்டி நிற்கும் அங்கீகாரம்' எனக் கூறுவதா? அல்லது நபியவர்கள் குறிப்பிட்டது போன்று அல்லாஹ்வையும், அவனின் மலக்குகளையும், தூதர்களையும், வேதங்களையும் விசுவாசம் கொள்வது எனக் கூறுவதா? இதற்கான உங்கள் பதிலை எதிர்பார்க்கிறோம்.

பதில்; ஈமான் என்பது மனதால் ஏற்று கட்டளைகளுக்கு அடிபணிந்து நடப்பது என சுருக்கமாக நாம் குறிப்பிடுகிறோம். குறிப்பிட்ட நபர் ஈமான் குறித்து விரிவாக விளக்குமாறு கேட்டால் நபியவர்கள் குறிப்பிட்ட பதிலைக் குறிப்பிடுவதுடன் ஈமான் என்பது மார்க்கத்தின் அனைத்துப் பகுதிகளையும் குறிக்கும் என்பதை விளக்கமாக கூறிவிடவும்.

(19)கேள்வி: ஈமான் குறித்த பதிலை விரிவாக விளக்குமாறு வேண்டுவதுடன், அர்கானுல் ஈமான் குறித்து அறிந்து கொள்ளவும் நாம் விரும்புகிறோம்.

பதில் : ஈமான் பற்றிய எமது வரைவிலக்கணத்தையும், ஜிப்ரீல் அலை அவர்கள் நபி (ஸல்) அவர்களிடம் ஈமான் குறித்து வினவிய போது நபி ஸல் அவர்கள் குறிப்பிட்ட வரைவிலக்கணத்தையும் முன்னர் குறிப்பிட்டோம். நாம் ஈமான் என்பதற்கு குறிப்பிட்ட 'ஏற்றுக் கொள்ளலையும் அடிபணிதலையும் வேண்டி நிற்கும் அங்கீகாரம்' என்பது பொதுவான ஒரு வரைவிலக்கணமாகும் இது மார்க்கத்தின் அனைத்து விடயங்களையும் உள்ளடக்கிக் கொள்கிறது. இந்த

வரைவிலக்கணத்தைத் தான் அகீதாவின் அடிப்படைகள் குறித்து பேசிய அறிஞர்கள் குறிப்பிட்டுள்ளனர். நபி (ஸல்) அவர்கள் ஜிப்ரீல் (அலை) அவர்களுக்கு ஈமான் குறித்து கேட்ட போது வழங்கிய பதிலானது, குறிப்பான ஒரு அம்சமாகும்.

இஸ்லாம் என்பது வெளிப்படையான அமல்களாகும். அல்லாஹ்வைத்தவிர உண்மையான கடவுள் வேறு யாறும் இல்லை என்பதை மனிதன் ஏற்றுக் கொள்வது ஈமானைச் சார்ந்த விடயம் என்பதில் எவருக்கும் மாற்றுக் கருத்தோ, சந்தேகமோ கிடையாது. கலிமாவை ஒரு மனிதன் நாவால் மொழிந்து விடுகின்ற போது கலிமாவானது தொழுகை ஸகாத் நோன்பு போன்ற வெளிப்படை அமல்களில் ஒன்றாக மாறிவிடுகிறது.

ஈமானின் அர்கான்கான்களை நபி ஸல்) அவர்கள் ஜிப்ரீல் அவர்களின் கேள்விக்கு விடையளிக்கும் போது விளக்கியமை குறிப்பிடத் தக்கதாகும். அவைகள் அல்லாஹ்வையும் அவனது மலக்குகளையும், வேதங்களையும் நபிமார்களையும், கியாமத் நாளையுமம, நன்மையும் தீமையும் இறைவிதியின் அடிப்படையில் நிகழ்வதாகும் என்பதை நம்புதலை ஈமானின் அர்கான்களாகக் குறிப்பிட்டார்கள்.

அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொள்வது நான்கு விடயங்களை உள்ளடக்கியுள்ளது.

முதலாவது: அல்லாஹ் இருப்பதாக நம்புவது.

இரண்டாவது : அல்லாஹ்வின் படைத்து பரிபாலிக்கும் ஆற்றலை நம்புவது (அதாவது படைத்துப் பரிபாலிப்பவன் அவன் ஒருவனே. அவனுக்கு இணையாகவோ துணையாகவோ யாரும் இல்லை என்று நம்புவது.)

மூன்றாவது அல்லாஹ் வணக்கத்திற்குரியவன் என நம்புவது

நான்காவது :அல்லாஹ்வின் பெயர்களையும், பண்புகளையும் நம்புவது.

இந்நான்கு விடயங்களையும் பின்வருமாறு விரிவாகக் குறிப்பிட முடியும்.

முதலாவது அல்லாஹ் இருப்பதாக நம்புவது என்பதன் கருத்து அல்லாஹ் இருப்பதை முழுமையாக ஏற்றுக்கொள்ளல் வேண்டும், இதனை உலகிலுள்ள எவறும் மறுக்கவில்லை. மறுத்தவர்கள் பெருமைக்காகவன்றி மறுக்கவில்லை என்பதுவே உண்மையாகும், பகுத்தறிவுள்ள எவரும் இவ்வுலகம் திடீரென உருவான ஒன்றாகவோ, இதனை உருவாக்கியவன் இல்லாது இயல்பாக உருவானது என்றோ சொல்வது அசாத்தியமான விடயமாகும். அல்லாஹ்வின் இருத்தலை மனித இயல்பும், பகுத்தறிவும், புலன்களும், இறைமார்க்கமும் உறுதிப்படுத்துவதை காணமுடிகிறது.

பகுத்தறிவு ரீதியான ஆதாரத்தைப் பொறுத்தவரை நாம் இப்பிரபஞ்சத்தின் நிகழ்வுகளை அவதானிக்கின்றோம். அந்நிகழ்வுகளை இயக்குவதற்கும், நிகழ்த்துவதற்கும் படைப்பினங்கள் எவரும் சக்திபெற்றவர்களாக இல்லை என்பதை நாம் அறிவோம். இப்பிரபஞ்சத்தில் காணப்படுகின்ற நட்சத்திரங்கள்,மலைகள்,ஆறுகள், மரங்கள், மனிதர்கள், மிருகங்கள் யாவும் எப்படி உருவானது? அவைகள் திடீரெண உருவானவைகளா? அல்லது அவற்றை உருவாக்கியவன் இல்லாது தாமாக உருவானவையா?அல்லது இப்பிரபஞ்சம் தன்னை படைத்து உருவாக்கிக் கொண்டதா? மேலே குறிப்பிட்ட மூன்று எடுகோள்களும் உண்மைக்குப் புறம்பானது. உண்மையில் இப்பிரபஞ்சமும், அதிலுள்ளவைகளும் அல்லாஹ்வினால் உருவாக்கப்பட்டதாகும். அதனை இயக்கும் முழு அதிகாரம் அல்லஹ்விடமே உள்ளது.

ஆக இப்பிரபஞ்சம் எவ்விதத் திட்டமுமின்றி இயல்பாக திடீரென உருவாக்கப் பட்டுள்ளது என எவரும் குறிப்பிட்டால் அது பகுத்தறிவுக்கும், நடைமுறை யதார்த்தத்திற்கும் புறம்பானது. எந்தப் பொருளும் அதனை உருவாக்கியோன் இல்லாமல் இல்லை என்பது நடை முறை உண்மையாகும். அந்த வகையில் புதுமையும், நேர்த்தியும் மிக்க மிகப் பிரமாண்டமான பிரபஞ்சப் படைப்புகளும், அதன் முரண்படா ஒழுங்கும் இவைகள் திடீரென உருவானவை அல்ல என்பதற்கு சான்றாகும்.

அத்துடன் எவ்விதத் திட்டமுமின்றி இப்பிரபஞ்சமும் அதிலுள்ளவைகளும் உருவாகியிருந்தால் இந்நேர்த்தியான ஒழுங்கை இப்பிரபஞ்சத்தில் காண முடியாதிருக்கும் என்பதுவே யதார்த்தமாகும்.

மேலும் இப்படைப்பினங்கள் தம்மைத் தாமே உண்டாக்கிக் கொண்டன என்பது சாத்தியமற்றது. மேலும் அவை திடீரென உருவாக்கப்பட்டன என்பதுவும் சாத்தியமில்லை என குறிப்பிடுவதற்குரிய காரணம் யாதெனில் இவைகள் யாவும் அது குறிப்பிட்ட பொருளாக உருவாகுமுன் எப்பொருளாகவும் இருந்ததில்லை. அப்படியாயின் “இல்லாமை (மஃதூம்) என்பது படைக்கும் ஆற்றலுடையதாக எப்படி ஆக முடியும்.?

இந்தப் படைப்பினங்கள் தம்மைத்தாமே உண்டாக்கிக் கொள்ளவுமில்லை, தற்செயலாகத் தோன்றவுமில்லை எனும் போது இவற்றைப் படைத்த ஒருவன் இருக்க வேண்டும் என்பது உறுதியாகி விட்டது. அவன்தான் அகில உலகங்களையும் படைத்து பரிபாலிக்கும் அல்லாஹ். இதனையே பின்வரும் ஸூறா அத்தூரின் 35-36 வசனங்கள் விளக்குகின்றன. '(படைப்பாளன் யாருமின்றி தாமாக இவர்கள் பிறந்தார்களா?

அல்லது இவர்கள் தங்களுக்குத் தாங்களே படைப்பாளர்களாக இருக்கின்றார்களா?

எனவே இப்பிரபஞ்சத்தின் படைப்பாளன் அல்லாஹ் என்பது பகுத்தறிவு ரீதியாக உறுதியாகிவிட்டது.

அல்லாஹ் இருக்கிறான் என்பதற்கான மனித இயல்பு இயம்பும் ஆதாரம்.

ஒவ்வொரு படைப்பினமும் தன்னைப் படைத்த இறைவனை ஏற்ற நிலையில் படைக்கப்பட்டுள்ளது என்பது மிகப்பெரும் ஆதாரமாகும். ஏனெனில் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் "பிறக்கும் ஒவ்வொரு குழந்தையும் இயற்கையான உண்மை மார்க்கத்தில் பிறக்கின்றன. ஆனால் அதன் பெற்றோர் தான் அக்குழந்தையை யூதனாகவோ, கிறிஸ்தவனாகவோ, நெருப்பு வணங்கியாகவோ மாற்றி விடுகின்றனர்."

இதனால்தான் எந்தவொரு மனிதனுக்கும் உலகத்தில் அவனை அழிவுக்குள்ளாக்கத் தக்க நிகழ்வுகள் தீடீரென ஏற்படின் உடனே யா அல்லாஹ்! எனது இரட்சகனே போன்ற வார்த்தைகளைக் கூறி விடுகின்றான், இவ்வார்த்தை ஒரு உண்மையை தெளிவு படுத்துகிறது. அது தான் மனிதனின் இயற்கை உணர்வானாது அல்லாஹ்வின் இருப்பை ஏற்ற நிலையில் படைக்கப்பட்டதாகும் என்பதுவே.

அல்லாஹ் இருக்கிறான் என்பதற்கான புலன்கள் அளிக்கும் ஆதாரம்.

இந்த விடயத்தைப் பொருத்தவரை பிரார்த்தனை செய்பவர்களின் பிரார்த்தனை ஏற்றுக்கொள்ளப்படுவதை நாம் அதிகம் கேள்விப் படுகிறோம். அதுமட்டுமல்லாமல் கண்கூடாகக் காண்கின்றோம்.

இதற்கு குர்ஆனில் அதிகமான உதாரணங்களைக் காணமுடியும். எடுத்துக்காட்டாக பின்வரும் குர்ஆன் வசனத்தை குறிப்பிடுகிறேன்

அய்யூப் தனது இரட்சகனிடம் நிச்சயமாக துன்பம் என்னைப் பீடித்துக் கொண்டது. கருணையாளர்களில் நீயே மிக்க கருணையாளன் என அழைத்ததை நீ எண்ணிப்பார்ப்பீராக. அப்போது நாம் அவரின் பிரார்த்தனையை ஏற்று அவரை பீடித்த துன்பத்தை அகற்றினோம். (அன்பியா(83-84)

ஸுன்னாவிலும் இதற்கு அதிகமான உதாரணங்கள் உள்ளன, அவற்றில் ஒன்றுதான் அனஸ் ரழி அவர்களின் ஹதீஸாகும்.

அனஸ் ரழி கூறுகிறார்கள் :ஒரு முறை கிராமப்புற அரபி ஒருவர் ஜூம்ஆத் தினத்தில் நபி (ஸல்) மிம்பரில் உரையாற்றிக் கொண்டிருக்கும் வேளையில் வந்து பின்வருமாறு கூறினார்கள். அல்லாஹ்வின் தூதரே! (மழையின்மையால்) சொத்துக்கள் அனைத்தும் அழிந்து விட்டன. வருமானத்தின் வாயில்களும் துண்டிக்கப்பட்டு விட்டன. எங்களுக்காக அல்லாஹ்விடம் மழை வேண்டிப் பிரார்த்தியுங்கள் என்று கூறினர்.

உடனே நபி ஸல் அவர்கள் இரு கரமேந்தி
இறைவா! எங்களுக்கு மழையைப் பொழியச் செய்வாயாக. என மூன்று முறை இறைஞ்சியதும் தெளிவாக இருந்த வானம் உடனே மழைமேகமாக மாறி நபி (ஸல்) அவர்கள் மின்பர் மேடையிலிருந்து இறங்குவதற்குள் மழை நீர் அவர் தாடியிலிருந்து வடிந்து கொண்டிருந்ததை மக்கள் கண்டனர்.

மழைபொழிவது இரண்டாவது ஜூம்ஆ வரை ஒரு வார காலம் நீடித்தது. அந்நேரத்தில் ஒரு மனிதர் எழுந்து 'அல்லாஹ்வின் தூதரே! கட்டடங்கள் இடிந்து விழுந்து விட்டன.

செல்வமெல்லாம் மழை நீரில் மூழ்கிவிட்டன. எங்களுக்காக அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்யுங்கள். என்று கூறினார்

உடனே நபியவர்கள் இரு கரம் ஏந்தி பிரார்த்தனை புரிந்தார்கள் 'யா அல்லாஹ்! எங்கள் மீது அல்லாமல் எங்கள் சுற்றுப்புறங்களில் (மழை பொழியச் செய்வாயாக) என்றார்கள். நபியவர்கள் தங்களது கைகளினால் வானத்தை நோக்கி சுட்டிக்காட்ட அல்லாஹ்வின் அனுமதியின் பிரகாரம் மேகங்கள் கலைந்து செல்லலாயின. மக்கள் சூரிய வெளிச்சத்தில் நடந்து சென்றனர். ஆதாரம் ஸஹீஹுல் புஹாரி

பிரார்த்தனை புரிவோரின் பிரார்த்தனை ஏற்றுக் கொள்ளப் படுவது இன்று வரை கண்கூடாய்க் காணும் விடயமாகும். அதுமட்டுமல்லாது அதிகமான மனிதர்கள் அல்லாஹ்விடம் இறைஞ்சி அதற்கான பதிலையும் உடன் பெற்றுக் கொள்கின்றனர். இது அல்லாஹ் இருக்கிறான் என்பதற்கான புலன்கள் காட்டும் ஆதரமாகும்.

அல்லாஹ் இருப்பதை உறுதிப்படுத்தவதற்கான மார்க்க ரீதியான ஆதாரத்தைப் பொறுத்தவரை அல் குர்ஆனிலும் நபியவர்களின் ஸுன்னாவிலும் நிறைய ஆதாரங்கள் காணப்படுகின்றன. அதில் பின்வரும் குர்ஆன் வசனத்தை மாத்திரம் குறிப்பிடுறோம் “இந்த வேதமானது அல்லாஹ் அல்லாதவரிடமிருந்து கிடைத்திருந்தால் அதிகமான முரண்பாடுகளைக் அவர்கள் கண்டிருப்பார்கள்” என அல்லாஹ் குறிப்பிடுகிறான் .இந்த வசனமானது அல்லாஹ்வை ஈமான் கொள்வதையும் அவனின் இருப்பை ஈமான் கொள்வதையும் உள்ளடக்கியுள்ளது.

IslamHouse.com